541 ,, ரத்நவதீவிவாஹார்யம் யந்த்ரத்தை எய்தல்
,, காஷ்டாங்மாரிகன்முதலியோர் போர் தொடங்குதல்
,, ஜீவகன் வெற்றி பெற்று அரசனுதல்
542 ஜீவகன் தீக்ஷித்தது
542 மணயரரிடம் ஸ்ரேணிகன், யர்மருகிகள்வரலாற்றை அறிதல்

பக்கம்

543 ஸ்ரேணிகன் யர்மருசிகட்கு அதனைத் தெரிவித்தல்
544 அந்த்யகேவலியாகும் ஜம்பூநாமரின் எதிர்கால வரலாறு
545-6 ஜம்பூநாமன் அதுப்ரேக்ஷகளை எண்ணி நிர்வேமபாயண ணைவது
546-8 ஜம்பூநாமனுக்கும் விதியுச்சோரனுக்கும் நிகழும் ஸம்ஹாஷணை
546 விதியுச்சோரன் ஓட்டகத்தின் செய்தி கூறுவது
,, ஜம்பூநாமன் கூறுவது
546-7 விதியுச்சோரன் நரியின்கதை கூறுவது
547 ஜம்பூநாமன் கூறுவது
,, விதியுச்சோரன் மற்றொரு நரிக்கதை கூறுவது
,, ஜம்பூநாமன் கூறுவது
547-8 விதியுச்சோரன் ஒரு ஸ்த்ரீகதையை கூறுவது
548 ஜம்பூநாமன் உலகவின்பத்தை விளக்குங் கதையை கூறுவது
548 ஜம்பூநாமன்முதலியோர் தீக்ஷிப்பாராதல்
549 அநாவ்ருததெவன் வரலாறு
,, விதியுந்மாலினியின் முன்வரலாறு
550 ஸாகரதத்தர்வரலாறு
551-2 ஹவதெவதபோயநர்பொருட்டு ஸுவ்ரதை சில அர்யாவ்ருத்தம் சொல்லுதல்
553 ஜம்பூநாமருக்குப் பின் வருந் தபோயநர்கள்
554-60 ப்ரீதிங்கரமுனிவர்வரலாறு
555 ப்ரீதிங்கரன் ஸுதிலகம் என்னும் நகருட் புக்கது
555-6 ,, அங்கு வஸுந்யரைஎன்பவளைக் காண்டல்
557 ,, தன்னெடு வந்தவரால் வஞ்சிக்கப்படுதல்
559 ,, வஸுந்யரையை அடைதல்
561 ஐந்தாங்காலத்தின் நிலைமை
,, சதுர்முவன் என்னுங் கல்கியின் வரலாறு
562-3 ஆறுங்காலத்தின் நிலைமை

பக்கம்

563 உத்ஸர்ப்பிணீகாலத்தின் நிலைமை
564 தத்காலத்துத், தீர்யங்கரர்முதலியோர் பெயர்கள்
567 வர்யமாநஸ்வாமி அபவஹரபதம் அடைதல்
567-8 ,, பூர்வஹவாவலி
569 ஏகாதஸருத்ரர்பெயர் முதலியன
570 ஹவிஷ்யத் தீர்யங்கரர்பெயர்
571 சக்ரவர்த்திகள்முதலியோர்திதிவிவரணம்

———

நான்முகம்

ஸ்ரீபகவதர்ஹத்பரமேஸ்வரன் ஸமவஸரணமண்டபத்தில் எழுந் தருளியிருந்து கணதரருக்கு உபதேஸஞ் செய்யுங்கால், அவரது திருவாய்-மலரினின்று வெளிப்பட்ட வாக்குக்கள் 'ஸ்ரூதம்' (வேதம்) என்று ஜைனர்களால் வழங்கப்படும். அவ் வேதம் நான்கு பிரிவினை யுடையது. அப் பிரி வொவ்வொன்றற்கும் அநுயோகம் என்று பெயர் வழங்கும். பிரிவு நான்காவன :

1. ப்ரதமாநுயோகம்
2. கரணாநுயோகம்
3. சரணாநுயோகம்
4. த்ரவ்யாநுயோகம் என்பன.

இவை பரமாகமம் எனவும் வழங்கும்.

இவற்றுள், த்ரவ்யாநுயோகத்தில்—[1]ஷட்த்ரவ்யம், பஞ்சஅஸ்திகாயம், ஸப்ததத்த்வம், நவபதார்த்தம், ந்யாஸம், ப்ரமாணம், ஸஜ்ஞானம், அஜ்ஞானம், த்வாதஸாங்கம், ப்ரகீர்ணகம், நவநயம், ஸப்தபங்கி, பாவம், ஔபஸமிகம், க்ஷாயிகம், க்ஷாயோபஸமிகம், ஔதயிகம், பாரிணாமிகம், குணஜீவமார்க்கணஸ்தானம், ஏகேந்த்ரியம், விகலேந்த்ரியம், பஞ்சேந்த்ரியம், பர்யாப்தி, ப்ராணம், ஸம்ஜ்ஞா, கதி, இந்த்ரியம், ஜீவநிகாயம், யோகம், வேதம், கஷாயம், ஜ்ஞானம், ஸம்யமம், தர்ஸனம், லேஸ்யா, பவ்யத்வம், ஸம்யக்த்வமார்க்கணை, ஸம்ஜ்ஞித்வம், புத்கலம், ஆகாஸம், காலம், ஆஸ்ரவம், பந்தம், கர்மம், புண்யம், பாபம், ஸம்வரம், நிர்ஜரா, மோக்ஷஹேது, மோக்ஷம், விஸ்தரஸ்யாநுயோகம், விஸ்தரஅஷ்டகுணம் என்னும் இவற்றின் விவரணம் கூறப்பட்டுளது.

சரணாநுயோகத்தில்—பஞ்சலப்தி, த்ரிகரணம், ஸம்யக்த்வம், அஷ்டாங்கம், அஷ்டகுணம், பஞ்சஅதிசாரம், ஏகாதஸநிலயம், நிர்வேகத்ரயம், ஸப்தவ்யஸனம், ஸல்யத்ரயம், அஷ்டமூலகுணம், அணுகுண ஸிக்ஷாவ்ரதம், இருபத்தைந்து அதிசாரம், மௌனம், அந்தராயம், ஸ்ராவகதர்மம், ஜைநாஸ்ரமம், ஆர்யஷட்கர்மம், இஜ்யா, அர்த்தார்ஜனகர்மம், தத்தி, க்ஷத்ரிய, பிக்ஷு, யதி, முனி, ருஷி, ராஜர்ஷி, ப்ரஹ்மர்ஷி, மரணம், அனுப்ரேக்ஷை, யதிதர்மம், மூலகுணம், பாவனை, குப்தி, ப்ரவசனமாத்ருகா, உத்தரகுணம்,

1. இவற்றுள் ஒருசில, ஸ்ரீபுராணத்தில் அறியக்கூடும். இவற்றின் விவரணம் ஸாஸ்த்ரஸார ஸமுச்சயம், பதார்த்தஸாரம், தத்த்வார்த்தஸூத்ரம் முதலிய நூல்களிற் காணலாகும்.

பரீஷஹம், தபஸ், ப்ராயஸ்சித்தம், ஆலோசனம், விநயம், வையாப்ருத்யம், ஸ்வாத்யாயம், வ்யுத்ஸர்க்கம், த்யானம், இருத்தி, நிர்க்ரந்தர், ஆசாரம், ஸாமாசாரம், ஸப்த பாமஸ்த்தானம் என்னும் இவையும், இவற்றின் பிரிவுகளும் கூறப்பட்டுள்ளன.

கரணநுயோகத்தில்—த்ரிலோகம் நரகஸ்ரேடீபத்த ப்ரகீர்ணக பிலம் நாரகனுக்கம் இவையும், த்வீப ஸமுத்ரங்கள் கர்மபூமி போகபூமி குபோகபூமி மந்தரகிரி ஜம்பூவ்ருக்ஷம் ஸால்மலிவ்ருக்ஷம் வர்ஷதரபர்வதம் ஸரோவரம் மஹாநதி நாபிநகம் யமககிரி கனககிரி திக்கஜபர்வதம் வக்ஷார பர்வதம் விபங்கநதி விதேஹஜனபதம் விஜயார்த்தபர்வதம் வ்ருஷபகிரி இவையும், சதுர்நிகாயஅமரர் ஸ்வர்க்கம் நவக்ரைவேயகம் நவானுத்திஸம் பஞ்சானுத்தரம் படலம் ஸ்ரேடீபத்தம் ப்ரகீர்ணகம் விமானம் லோகாந்திகதேவர் அணிமாத்யஷ்டகுணங்கள் என்னும் இவையும் கூறப்பட்டுள்ளன.

ப்ரதமாநுயோகத்தில்—காலஸ்வரூபம் சதுர்தஸமனுக்கள் சதுர்விம்ஸதிதீர்த்தங்கரர்கள் த்வாதஸசக்ரவர்த்திகள் ஸப்தவிம்ஸதிபல்தேவ வாஸுதேவப்ரதிவாஸுதேவர்கள் என்னும் இவர்களின் சரித்திரம் கூறப்பட்டுள்ளன.

இவையெல்லாம் ப்ரதமதீர்த்தங்கரராகிய வ்ருஷபதேவரால் பரதசக்ரவர்த்திக்குக் கூறப்பட்டன; இறுதியில், வர்த்தமானஸ்வாமி-காலத்தில் கௌதமகணதரரால் ஸ்ரேணிகமஹாராஜனுக்கு உரைக்கப் பட்டன.

[1]ப்ரதமாநுயோகம் 25544231075[2]00 அநுஷ்டுப் ஸ்லோகங்களை உடையது. அது மஹாபுராணம் என்று வழங்கும்.[1] [2]கௌதமகணதரர் ஸ்ரேணிகனுக்குக் கூறிய அப் புராணத்தை[3] கௌதமமஹர்ஷி ஸுதர்மருக்குப் போதித்தார். ஸுதர்மர் ஜம்பூகாமருக்கு அருளிச் செய்தார். அதுமுதல் குருபரம்பரையாய் வழங்கிவந்தது. [3]பின்னர், பெரும் புகழ் வாய்ந்த வீரஸேனருக்கு ஜிஷ்யரும், அமோகவர்ஷன் என்னும் அரசனல் வணங்கப்பட்டவரும், ப்ரஸித்தராகிய தசரதகுருவி னுடு ஒருங்கு கற்றவரும் ஆகிய ஜினஸேநாசார்யர், [4]தஹிபரமேஸ்வர ரென்பவர் வசனநடையில் இயற்றியிருந்த வ்ருஷபதேவர் வரலாறு-

---

1. மஹாபுராணஸங்க்ரஹம். 2: 109. 110.
2. ,, 1: 190—200.
3. ,, 77: 6—19.
4. இவர் த்ரிஷஷ்டி ஸலாகாபுருஷபுராணம் இயற்றியவர் என்பது கன்ன-டசாவுண்டராய புராணத்தாலும் மேமிநாதபுராணத்தாலும் தெரிகின்றது.

களைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க் கேற்பச் சுருக்கமாகச் செய்யுள்நடையில் செய்யக் கருதி, 'மஹாபுராண ஸங்க்ரஹம்' என்னும் பெயரால் ஆரம்பித்து, வ்ருஷபதேவரின் சரிதத்திற் பெரும்பகுதியை (முதல்42 பர்வங்களை)ச் செய்தார். அவருக்குப்பின் அவர்சிஷ்யர் குணபத்ரர் வ்ருஷபதேவர்சரிதத்தின் எஞ்சிய பகுதியையும், மற்றைத்தீர்த்தங்கரர்புராணங்களையும் செய்து முடித்தார்.

மஹாபுராணத்தில் நாயகர் அறுபத்துமூவராதலின் அதிலுள்ள அர்த்தாதிகாரங்கள் அறுபத்துமூன்று என்று கொள்வர்.[1] ஆயின், தீர்த்தகரர் இருபத்துநால்வர்புராணங்களுள் சக்ரவர்த்திகள் முதலியோர் சரித்திரங்கள் அடங்கியிருத்தலின், புராணம் [2]இருபத்துநான்கே என்று சிலர் கொள்வர்.

தீர்த்தங்கரர்புராணங்களில் வந்துள்ள *சக்ரவர்த்திகள் முதலியோர்களின் பெயர்ப்பட்டவணை

தீர்த்தங்கரர் புராணம்	சக்ரவர்த்திகள்	பலதேவ, வாஸுதேவ, ப்ரதிவாஸுதேவர்
1 வ்ருஷப ஸ்வாமிபுராணம்	1 பரத சக்ரவர்த்தி	——
2 அஜிதநாத ஸ்வாமிபுராணம்	2 ஸகர சக்ரவர்த்தி	——
11 ஸ்ரேயாம்ஸ ஸ்வாமிபுராணம்	——	1 விஜய பலதேவன் த்ரிப்ருஷ்ட்ட வாஸுதேவன், அஸ்வக்ரீவ ப்ரதிவாஸுதேவன்
12 வாஸுபூஜ்ய ஸ்வாமி புராணம்	——	2 தாரக பலதேவன் த்விப்ருஷ்ட்ட வாஸுதேவன், அசல ப்ரதிவாஸுதேவன்

1. அத்யாயம் 2: 125.
2. ,, 2: 127.

* கணதரருள் வ்ருஷபஸ்வாமிகணதரர் மேகஸ்வரன், விமலஸ்வாமிகணதரர் மேருமந்தரர், ஸாந்திநாதஸ்வாமிகணதரர் சக்ராயுதன் ஆகிய இவர் வரலாறும், வர்த்தமானஸ்வாமிகாலத்து ஜீவகன்சரித்ரமும் கூறப்பட்டுள.

13 விமலஸ்வாமி புராணம்	——	3 ஸ்வயம்பூ பலதேவன் தர்ம வாஸுதேவன் மது ப்ரதிவாஸுதேவன்
14 அனந்தநாத ஸ்வாமிபுராணம்	——	4 ஸுப்ரப பலதேவன் புருஷோத்தம வாஸுதேவன், மதுஸூதன ப்ரதிவாஸுதேவன்
15 தர்மநாத ஸ்வாமிபுராணம்	3 மகவான் சக்ரவர்த்தி 4 ஸனத்குமார சக்ரவர்த்தி	5 ஸுதர்ஶன பலதேவன் புருஷஸிம்ஹ வாஸுதேவன், மதுக்ரீவ ப்ரதிவாஸுதேவன்
18 அரஸ்வாமி புராணம்	*8 ஸுபௌம சக்ரவர்த்தி	6 நந்திஷேண பலதேவன் புண்டரீக வாஸுதேவன் நிஶும்ப ப்ரதிவாஸுதேவன்
19 மல்லிநாத ஸ்வாமிபுராணம்	9 பத்மசக்ரவர்த்தி	7 நந்திமித்ர பலதேவன் தத்த வாஸுதேவன் பலீந்த்ர ப்ரதிவாஸுதேவன்
20 முநிஸுவ்ரத ஸ்வாமிபுராணம்	10 ஹரிஷேண சக்ரவர்த்தி	8 ராம பலதேவன் லக்ஷ்மண வாஸுதேவன் ராவண ப்ரதிவாஸுதேவன்
21 நமிநாத ஸ்வாமிபுராணம்	11 ஜயஸேன சக்ரவர்த்தி	——
		9 பத்மநாப பலதேவன்
22 நேமிஸ்வாமி புராணம்	12 ப்ரஹ்மதத்த சக்ரவர்த்தி	க்ருஷ்ணவாஸுதேவன் ஜராஸந்த ப்ரதிவாஸுதேவன்

---

* 16, 17, 18 ஆமவராகிய ஶாந்திநாதர், குந்துநாதர், அரஸ்வாமி இவர்கள் முறையே 5, 6, 7-ஆஞ் சக்ரவர்த்திகளாயும் விளங்கினர்.

மஹாபுராண ஸங்க்ரஹம்

மஹாபுராணஸங்க்ரஹம்—பூர்வபுராணம் என்றும் உத்தரபுராணம் என்றும் இரண்டு பிரிவினை யுடையது. பூர்வபுராணத்தில் வ்ருஷபதேவரின் சரிதமும் பரதசக்ரவர்த்தியின் சரிதமும் உள்ளன. ஏனைய் அறுபத்தெருவர்சரிதமும் உத்தரபுராணத்தில் அடங்கியுள்ளன. உயர்ந்தோராகிய அறுபத்துமூவர்தஞ் சரிதத்தைக் கூறுதலின் இது, த்ரிஷஷ்டிலக்ஷண மஹாபுராண ஸங்க்ரஹம் எனப்படும். 'இத்யார்ஷே ஹரிவம்ஸே ஜினஸேநாசார்ய ப்ரணீதே த்ரிஷஷ்டிலக்ஷண மஹாபுராண ஸங்க்ரஹே கயாமுவ வ்யாவர்ணநம் நாம ப்ரத²மம் பர்வ' என்று வருதலின் இஃ தறியப்படும். இதனை, 'த்ரிஷஷ்டி மஹாகாபுருஷ புராணம்' என்றலும் உண்டு. [1]மஹாபுராணம் என்றும் வழங்குவர்.

மஹாபுராணஸங்க்ரஹம்—எழுபத்தேழு பர்வங்களை யுடையது. அவற்றுள் இறுதிப்பர்வம்—புராணமியற்றிய காலம், ப்ரஶஸ்தி முதலியன கூறுவது. ஏனைய எழுபத்தாறுபர்வங்களில் அறுபத்துமூவரின் சரித்ரமுங் கூறப்பட்டுள்ளன. முதல் நாற்பத்தேழு பர்வங்களில் வ்ருஷபதீர்த்தங்கரரின் சரித்ரமும் பரதசக்ரவர்த்தியின் சரித்ரமும் விரிவாகக் கூறப்பட்டன. அவற்றுள்ளும் ஜினஸேநாசார்யர் இயற்றியருளிய முதல்நாற்பத்திரண்டு பருவங்களிற் கூறப்பட்டுள்ள சரிதம் மிக்க விரிவினதாகும். ஜினஸேநாசார்யர் தமது புராணத்தைக் காவியரூபஞ் சிறக்க இயற்றியுள்ளார். அவர்செய்யுள் ஒழுகிய ஓசையினை உடையது; பலவகை அணிகள் அமைந்து விளங்குவது; படிப்போருக்கு இன்பம் பயப்பது.

குணபத்ராசார்யர் புராணவரலாறுகளைச் சுருக்கிக்கூறி நிறைவேற்றிவிடல் வேண்டும் என்னுங் கருத்தினராய்ப் புராணத்தை இயற்றினர் எனத் தோன்றுகின்றது. ஆதலின், அவர்செய்யுளில் வருணனை அதிகமில்லை; ஆயினும் சிலவிடங்களில் அமைந்து விளங்குகின்றது. [2]குணபத்ரர்சிஷ்யருள் லோகஸேனரென்பவர் சிறந்தவர். குணபத்ரர் இப் புராணம் இயற்றும்போழ்து அவர் மிக்க உதவி புரிந்துள்ளார்.

[3]அகாலவர்ஷன்என்னும் அரசனது காலத்தில், அவனுக்குக் கீழ்ப்பட்ட லோகாதித்தன்என்பவன், தன்தந்தை வங்கன்என்பவன்பெயரால் அமைத்திருந்த வங்காபுரம் என்னும் நகரிலிருந்து வனவாசிநாட்டை ஆட்சிசெய்தான். அவனுட்சியில் சகவருடம் 820-இல் (கி. பி. 898), பிங்களவருடத்தில், குணபத்ரர் இப் புராணத்தைப் பூர்த்தி செய்தார். இது நிற்க.

1. மஹா பு. 77: 38. 2. மஹா. 77: 28. 3. மஹா. 77: 31–36.

ஜைனமும் தமிழ்நாடும்

தமிழ்நாட்டில் மிகப் பழையகாலத்தில் ஜைன பௌத்த சமயங்கள் பரவியிருந்தன என்பது தமிழ்நூல்களால் அறியலாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியத்தில் ஜைனசமயக் கோட்பாடுகள் சில உள்ளன என்பது [1]அறிஞர்சிலரது கருத்து. அதற்குப் பிற்பட்டனவாகிய தொகைநூல்களுள்ளும் அவை ஒரோவழிக் காணலாகும். [2]புறநானூற்றில் கடவுளரை யெண்ணுமிடத்துக் கண்ணபிரானோடு பலராமனை ஒருங்கு எண்ணியிருத்தலும், [3]பரிபாடலில் பலராமனது விக்ரஹவழிபாட்டைக் கூறியிருத்தலும் காண்க. பலராமனுக்குக் கோயில் எடுத்து வழிபட்டிருப்பது ஜைனசமயக் கொள்கையே யாகும். பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் நாலடியார், பழமொழி, ஏலாதி முதலியன ஜைனசமயத்தவரால் இயற்றப்பட்டனவே. இவற்றுள் ஜைன சமயக்கொள்கைகளும் சில வந்துள்ளன. ஏலாதியில் 66, 67-ஆஞ் செய்யுட்கள் ஜைனசமயத்தின் சுவர்க்க நரகவியல்புகளைத் தெரிவித்தல் காண்க. நரகங்கள் ஏழனுள் ஒன்று இருள்வட்டமாயும் (தம:ப்ரபை), மற்றொன்று மிக்க இருள்வட்டமாயும் (தமஸ்தம:ப்ரபை) இருக்கும். அவற்றையே [4]'இருளோடிருள்' என்று அந்நூல் கூறியுளது.

திருக்குறளில் [4]'உண்ணுமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண, அண்ணுத்தல் செய்யா தளறு' என்னுஞ் செய்யுளில் கூறப்பட்டுள்ள நரகம் நிகோதம் என்று ஜைனமதத்தில் வழங்கப்படுவதாகும். [5]இஃது அம் மதத்தில் கூறப்படும் ஏழுநரகங்களுக்குக் கீழ்ப்பட்டது. அவ் வேழுநரகங்களிலும் துன்பம் அனுபவிப்போருக்குக் காலவரையறை உண்டு. நிகோதத்திற்கு அவ்வாறு காலவரையறை இல்லை. ஆதலின் அதனை 'மீளாநரகம்' என்ப. அந் நரகத்தை யடைந்தோர் மீளுத லின்மையையே, 'அளறு அண்ணுத்தல் செய்யாது' என்பதனால் வள்ளுவனார் தெரிவித்துள்ளாராவர். இஃது, 'ஏழாம் நரகத்தின் கீழாம் நரகத்தை யடைவான்' என்று தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியாலும் அறியலாகும்.

இப்போதுள்ள பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணி ஜைனசமயத்ததுவே என்பதும், சிலப்பதிகாரம் ஜைனசமயத்தவரது வரலாறே என்பதும் அனைவரும் அறிந்தவை. இனி, சிறுகாப்பியங்களுள் ஒப்பில்லாததாகிய சூளாமணியும் ஜைனசமயத்துப் பலதேவ வாசுதேவர்களின்

---

1. ராவ்ஸாஹிப், திரு. ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் "செந்தமிழ்"ப் பத்திரிகையில் (தொகுதி 18, 19.) எழுதியிருப்பது காண்க. 2. புறம். 56.
3. பரிபா. 15. 4. குறள். 255. 5. கன்னட மல்லி. 14: 154, 5.

சரிதத்தைக் கூறுவதுவே. சிற்றிலக்கியங்களுள் திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி முதலியன ஜைனசமயத்தனவே.

இலக்கணங்களுள் பல்லோராலும் பயிலப்படுகின்ற நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், வச்சணந்திமாலை முதலியன ஜைனசமயப் பெரியோர்கள் இயற்றியனவே. திவாகரம், சூடாமணி-நிகண்டு முதலிய நிகண்டுநூல்களும் அச் சமயத்து அறிஞர்களால் அளிக்கப்பட்டவையே. இவற்றுல், தமிழ்மொழியில் ஒவ்வொரு துறையிலும் ஜைனசமய ஆசிரியர்கள் பல்வேறு நூல்களே இயற்றித் தமிழணங்கைச் சிறப்பித்து, அறிவுச்சுடரை நாட்டில் பாப்பினர் என்பது நன்கு அறியலாகும்.

இவ்வாறு ஜைனசமய ஆசிரியர் இயற்றிய நூல்கள் தமிழ்நாட்டில் யாண்டும் பரவியதனுல், அச் சமயக்கொள்கைகளும் நாட்டில் பரவலாயின. பல கூறுதல் என்? நாய்ச்சியார்திருமொழியில், காமனே வேண்டுமிடத்து, [1] 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்று கூறியிருப்பதனுல், ஸ்ரீவைஷ்ணவப்பெரியாராலும் ஜைனசமயக் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனலாகும். இக்கருத்து, [2] 'காமனுஞ் சாமனும்' என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளான் விளங்கும். கண்ணபிரான் குருந்தொசித்த வரலாறும் அந்நூலானே விளக்கமாகின்றது.

இனி, மக்கள் முதற்கண் எழுத்துக்களைக் கற்கத் தொடங்கும்பொழுது 'ஹரிஃ நமோத்து[5] சிந்தம்' என்று சொல்லும் வழக்கம் இன்னும் நம்நாட்டில் நிலைபெற்றுளது. [6] 'ஸித்தந் நமஃ' என்று கன்னடத்திலும், [7] 'ஓம் நமஸ்ஸிவாய ஸித்தம் நமஃ' என்று தெலுங்கிலும் இவ்வாறே சித்தனை வணங்கி அக்ஷராப்யாஸம் செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் வாழுந் தமிழ்மக்கள் தூயவுணவினை 'ஆரதபோஜனம்,' 'ஆரதம்' என்று இன்றும் வழங்குகின்றனர். 'ஆரதம்' என்பது 'ஆர்ஹதம்' என்பதன் திரிபு. அஃதாவது, அர்ஹத்ஸமய சம்பந்தமானது என்பதாகும். ஆகலின், ஆரதபோஜனமென்பது ஊனை விலக்கிய உணவிற்குப் பெய

1. நா.தி. 1 : 1. 2. சிவக. 43. 3. சிவக. 209.

4, 7. தமிழில் 'ஹரி:' என்பதும், தெலுங்கில் 'நமஸ்ஸிவாய' என்பதும் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டனவாகும். ஸித்தநமஸ்காரம் மூன்றுமொழிகளிலும் நிலைபெற்றிருப்பது உட்கொளற்பாலது.

5. சிந்தம் என்பது ஸித்தம் என்பதன் திரிபு; புத்தி என்பது புந்தி என்று வருவதுபோன்று சித்தம் என்பது சிந்தம் என்று வந்துளது.

6. 'ஸித்தம் நம:' என்பதில் நம: என்பதை ஸகாராந்த நபும்ஸகலிங்க நாமம் என்று கொள்ளவேண்டும் என்பது கன். ஸப்தாநு. ஸூ. 1. உரை.

ராயிற்று. இதனை இக்காலத்தவர் 'சைவவுணவு' என்று வழங்குகின்றனர். இதனைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் சிலர் 'சைவவுணவு' என்று வழங்கினும், ஆரதம் என்பது பெருவழக்காய் உளது. யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் பலர் தமிழ்நாட்டில் திருநெல்வேலிமுதலிய பல ஊர்களினின்று சென்று ஆண்டுக் குடியேறியவர்களாகலின், அவர்கள் வழங்குஞ் சொல்வழக்கு, பண்டு தமிழ்நாட்டில் வழங்கிய வழக்கே ஆதற்கு ஐயமின்று.

இனி, ஸ்ரீபுராண வரலாறுகளுள் பல, தமிழ்நாட்டில் சிற்றூர்களிலும் வழங்குகின்றன. சீதை இராவணன்மகள் என்பது ஸ்ரீபுராணத்துச் செய்தி. இது தமிழ்நாட்டில் வழங்குகின்ற கதை. 'சீதை பிறந்ததும் இலங்கை அழிந்ததும்' என்னும் பழமொழி இதனை வலியுறுத்தும். சீதை இலங்கையிற் பிறந்ததனால் அந் நகரம் அழிவுற்றது என்பதுவே இப் பழமொழியின் கருத்து. சூர்ப்பணகைமகன் ஆலின் அடியில் தவம் புரிந்துகொண்டிருக்கையில், ஆங்குச் சென்ற லக்ஷ்மணன் அம் மரத்தில் தொங்கிய வாளை எடுத்து அதன் கூர் பார்த்தற்கு அம்மரத்தைத் துணிக்க, அதனோடு அம் மரத்தடியில் இருந்த அவனும் துணிபட்டான் என்பது கன்னட ஜைனராமாயணத்தில் கூறப்பட்டுளது. இவ் வரலாறு தென்றமிழ்நாட்டில் வழங்கும் 'இராம நாடகம்' என்பதொரு நூலில் விரிவாகக் கூறப்பட்டுளது. ஸ்ரீவ்ருஷபதேவர்புராணத்தில் கூறப்பட்டுள்ள பீமர் என்னும் முனிவர்கதையும் (பக். 160-161), ஸ்ரீவர்த்தமானஸ்வாமிபுராணத்தில் ப்ரீதிங்கரன் வரலாறும் (பக். 554-559), மும்மூடநீக்கத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ள கதைகளும் பிறவும் என் சிற்றிளமைப்பருவத்தில் எங்கள் அம்மான் கெ. வே. கிருஷ்ணஸ்வாமிரெட்டியாரவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இதனால் இவையெல்லாம் கர்ணபரம்பரையில் தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவந்துள்ளன என்பது போதரு மன்றே!

இனி, ஸ்ரீபுராணத்தை நோக்குவோம்: 'ஸ்ரீ புராணம்' என்பதில் ஸ்ரீ என்பது முதற்கண் எழுதுஞ் சிறப்புச்சொல் எனவும், 'புராணம்' என்பதுவே இந்நூலின் பெயர் எனவும், ஆறணிகரில் 'ஜைந வித்தாந்த நிலய'த்தை அமைத்து நடத்திவரும் ஸ்வாமி ஸ்ரீபாலவர்ணிஎன்பவர் தெரிவித்தார்கள். இஃது அமைவுடையதாகத் தோன்றுகின்றது. சிறப்புடைப்பொருளை அடைமொழி பின்றிக் கூறும் வழக்கு உண்டன்றே! 'பூ' எனின், சிறப்புடைய பூவாகிய தாமரைப்பூவினைக் குறிக்குமென்பது 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே' என்பதனால் அறியலாகும். இதனை நோக்கும்பொழுது, புராணம் என்பதுவே நூலின் பெயராக வழங்குதல் கூடும் எனத் தோன்றுகின்றது. ஸ்ரீபுராணத்தினுள், 'இப்பெற்றியதாகிய

ஸ்ரீ புராணபரமாகமம் பரமமாங்கல்யமும் புண்யகாரணமு மாதலில்' (பக். 4) என்னுமிடத்திலும், 'ஸ்ரீ புராணத்துச் சொல்லப்படும் பொருள் எட்டு' என்னுமிடத்திலும் ஸ்ரீ என்பது அடைமொழி என்றும், புராணம் என்பதுவே தூற்பெயர் என்றும் கொள்ளுவதுவே அமைவுடைய தாகும். கன்னட ஆதிபுராணத்தில், புராணத்திற்கு (11: 42. வச) எட்டு அங்கம் கூறப்பட்டுள. ஈமது ஸ்ரீ புராணத்திலும் அவ்வாறு எட்டே கூறப்பட்டுள்ளன.

புராணமாவது—க்ஷேத்ரம் காலம் தீர்த்தம் (முக்தியுபாயம்) ஸத்புருஷர் அவர்செயல் என்னும் ஐந்து பொருள்களைக் கூறுவது (2: 38) என்றும், 'லோகம் தேசம் புரம் ராஜ்யம் தீர்த்தம் தானதவம் கதி பலம் என்னும் எட்டுப்பொருளைக் கூறுவது என்றும் (4: 3) மஹா புராணத்திற் கூறப்பட்டுள. ஆயின், முநிகள் கூறும் புராணத்திற்கு அங்கம் ஐந்து என்றும், கவிகள் கூறும் புராணத்திற்கு (காவ்ய ரூபமான புராணத்திற்கு) அங்கம் எட்டு என்றும் கன்னட அனந்தநாதபுராணத்தில் (1: 66) விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீ புராணத்திற் கூறப்படும் மஹாகாபுருஷர் அறுபத்துமூவருள் தீர்த்தங்கரர் இருபத்துநால்வர்; சக்ரவர்த்திகள் பன்னிருவர்; பலதேவர் ஒன்பதின்மர்; வாசுதேவர் ஒன்பதின்மர்; பலதேவவாஸுதேவர்களுக்குப் பகைவராய் வரும் ப்ரதிவாஸுதேவர் ஒன்பதின்மர். ஆயின், இவருள் பதிணறு, பதினேழு, பதினெட்டாந் தீர்த்தங்கரர்மூவரும் தீர்த்தங்கரராயும் சக்ரவர்த்திகளாயும் விளங்கினராகலின், புருஷர் அறுபதின்மரே. தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள், பன்னிரண்டு, பத்தொன்பது, இருபத்திரண்டு, இருபத்துமூன்று, இருபத்துநான்காமவராய தீர்த்தங்கரர் ஐவரும் குமாரகாலத்தே தீக்ஷித்தவர்.

சூளாமணியில் கூறப்படும் பலதேவர்முதலியோர் அத் தொகையினருள் முதலாமவர்; ராம லக்ஷ்மண ராவணர் எட்டாமவர். பலதேவ கிருஷ்ண ஜராஸந்தர் ஒன்பதாமவர். இவ் வறுபத்துமூவர்சரிதமேயன்றி கணதரர் சிலர்வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன. வ்ருஷபதேவருக்குக் கணதரனாகிய மேகஸ்வான், விமலஸ்வாமிக்குக் கணதரராகிய மேரு மந்தரர், ஸாந்திநாதஸ்வாமிக்குக் கணதரனாகிய சக்ராயுதன், வர்த்தமானஸ்வாமிகாலத்தவனாகிய ஜீவகன் இவர்தம் வரலாறுகள் கூறப்பட்டிருத்தல் காண்க.

நூற்பொருள் :

இப் புராணத்தின் முதற்கண், உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணி என் னுங் காலவிபாகமும், அவஸர்ப்பிணியின் முதல்மூன்றுகாலத்து நிலைமை-யும், போகபூமிகளின் இயல்பும், பத்து வகைக் கல்பகவிருக்ஷங்களின் இயல்பும், பதினல்வர்மனுக்களின் காலத்து நிகழ்ச்சிகளும் கூறப்பட் டுள்ளன. நமது பரதக்ஷேத்திரவாவலிகளும், முதல்மூன்று காலங்களில் கல்பகவிருக்ஷங்களால் காலங்கழித்துவந்தனர். முதல்மனுவின் காலத் திற்முன் சூரிய சந்திரரின் தோற்றத்தை மக்கள் அறிந்தனர். இரண்டாம் மனுவின் காலத்தில் நட்சத்திரங்கள் தோன்றின; மூன்றும் மனுவின் காலத்தில் மக்கள் துஷ்டமிருகங்களைக் கண்டு அஞ்சினர்; நாலாம் மனுவின் காலத்தில் கல்லுந் தடியுங்கொண்டு அம் மிருகங்களினின்று தம்மைக் காத்துக்கொள்ள அறிந்தனர்; ஐந்தாம் மனுவின் காலத்தில் கல்பக விருக்ஷங்களுக்காகப் பிணங்கினர்; ஆறும் மனுவின் காலத்தில் அம் மரங் களின் பொருட்டுக் கலகஞ்செய்தனர்; ஏழாம் மனுவின் காலத்தில் யானை குதிரைகளை வாகனமாகக் கொண்டனர். எட்டாம் மனுவின் காலத்தில் மக்கள் புதல்வரைப்பெற்று அச்சங்கொண்டு சிறிதுநேரம் ஜீவித்திருந் தனர். ஒன்பது பத்தாம் மனுக்களின் காலத்தில் புதல்வரைப் பெற்றவர் சிலநாள் உயிரோடிருந்தனர்; பதினொன்றும் மனுவின் காலத்தில் பல நாள் இருந்தனர்; பன்னிரண்டாம் மனுவின் காலத்தில் பல யாண்டுகள் வாழ்ந்தனர். அவன்காலத்திற்முன் மேகங்கள் தோன்றின. பதின் மூன்றும் மனுவின் காலத்தில் ஜராயுபடலத்தினுல் மூடிப் பிறந்த பிள்ளை-களினின்று அகனை வாங்கிப் போகடும் உபாயத்தை அறிந்தனர். பதினான்காம் மனுவின் காலத்தில் நாபிக்கொடியைப் போக்கும் உபாயத்தை அறிந்தனர். அவன்காலத்தில் மேகங்கள் மழை பொழிந்தன. எல்லாத் தானியங்களும் உழுது விதைக்காமல் தாமே விளைந்தன. நானவித விருக்-ஷங்கள் தோன்றிப் பயன் தந்தன. அக்காலத்து மக்கள் வாழ்க்கைமுறை-களை நன்கு அறிந்தனர் (பக். 17, 18). முதல் ஐவர்மனுக்கள் காலத்தில் அபராதஞ் செய்தோருக்கு 'ஹா' என்பதே தண்டனை. பின் ஐவர்-காலத்தில் 'ஹா', 'மா' (வேண்டா) என்பன தண்டனை ஆயின. பின் நால்வர்காலத்திலும் ஸ்ருஷபதேவர்காலத்தும் 'தி்க்' (சீ!) என்பது

தண்டனை யாயிற்று. முதற்சக்ரவர்த்தியாகிய பரதனது காலத்திற்றான் ஸரீரதண்டனை ஏற்பட்டது.

மேற்கூறிய இவையெல்லாம் மக்களின் அறிவும், வாழ்க்கை-முறையும் படிப்படியே முன்னேற்றம் அடைந்துவந்துள்ளன என்பதைத் தெளிவாகத் தெரிவிப்பன அன்றே!

முதல்தீர்த்தங்கரராகிய வ்ருஷபதேவர்காலத்தில் பயிர்கள் தாமே விளையாமல் ஒழிய, மக்கள் பசியால் வருந்தி அவரை யடைந்து குறை யிரக்க, அவர், ஊர்கள் வீடுகள் இவற்றை அமைப்பித்து (பக். 88), (பிராமணர்தவிர மற்ற) மூன்று வருணங்கள், ஆறுதொழில்கள், ஆசிரம வேறுபாடுகள் இவற்றை ஏற்படுத்தி, மணமுறைகளையும் உபதேசித்து உலகம் நடைபெற்றுவருமாறு அருளினர். அதனால் அக்காலம் க்ருதயுகம் என்று பெயர் பெற்றது. வ்ருஷபதேவரும் [1] ஸ்ருஷ்டிகர்த்தா என்னும் பெயர் பெற்றார்; அன்றியும், ஆதிப்ரஹ்மா ஆதிபகவன் என்றும் வழங்கப் பெற்றார். இவ்வாறு இவர்க்கு வழங்கும் ஆயிரந் திருநாமங்களை [2] வடமொழிப்புராணத்தில் காணலாகும்.

இப்பொழுது உலகம் நிகழ்ந்துவருகின்ற முறைமை வ்ருஷப-தேவர்காலம்முதலாக வருதலான், அவர் இவ்வுலகத்திற்கு முதல்வர் என்று கூறப்படுவர். அதனையே திருவள்ளுவனார், 'அகர முதல எழுத் தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு' என்று கூறியுள்ளாரென்னலாம்.

தீர்த்தங்கரரின் சரிதம்

தீர்த்தங்கரரென்று சிறப்பித்துக் கூறப்படுவோர் இருபத்து நால்வரே. இவர்தஞ் சரிதங்கள் பெரும்பாலும் ஒரே முறையில் நிகழும். தீர்த்தங்கரர், முற்பிறப்பில் பதினாறு பாவனைகளை அடைந்து தவம்புரிந்து ஸர்வார்த்தஸித்தியில் அஹமிந்திரன்பதவியை அடைந்து வாழ்ந்து அங்குநின்று உலகில் வந்து அவதரிப்பர். அவர் அவதரிக்குமுன் அவர்அன்னையார் பதினாறு கனவுகளைக் காண்பர். இந்திரனேவலால் குபேரன் அவர்மாளிகையில் ஆறுமாதம் பொன்மாரி பொழிவான். தீர்த்தங்கரர் பிறந்ததும் ஸௌதர்மேந்திரன் முதலியோர் வந்து, அவரை யானைமீது எழுந்தருள்வித்து, மந்தரமலையில் ஜன்மாபிஷேகம் பண்ணி, நாமகரணஞ் செய்து, மீண்டு அவர்தம் அரண்மனையில் சேர்த்து, தாயரை உணர்த்திப் புகழ்ந்து, ஆனந்தநர்த்தனம் புரிந்து, விடைபெற்று மீள்வர். பின்னர், உரிய காலத்தில் தீர்த்தங்கரருக்குத் தீக்ஷாகாலத்தை லௌகாந்திகதேவர் அறிவிப்பர். தீக்ஷைக்குச் செல்லும்போது இந்திரன் முதலியோர் சிவிகையைச் சுமப்பர். தீர்த்தங்கரர், தீக்ஷித்த மறுநாள்

1. மஹா. 47: 320. 2. மஹா. 24: 8—224.

பாரணையின் பொருட்டு நகருக்குட் செல்லுவர். அவருக்குத் தானமிடுபவர் பஞ்சஆஸ்சரியங்களே அடைவர். பின்னர், தீர்த்தங்கரர் தவத்தால் கேவலஞானத்தை அடைவர். அப்பொழுது இந்திரன்ஏவலால் ஸமவ ஸரணமண்டலம் நிருமிக்கப்படும். ஸமவஸரணம் பூமிக்குமேல் 5000 வில்லின் உயரத்தில் 12 யோஜனைப் பரப்புடையதா யிருக்கும். அதற்கு 20,000 படிகள் உண்டு. ஸமவஸரணத்தைச் சுற்றி 11 பூமிகள் இருக்கும். அவை முறையே சைத்யப்ரஸாதபூமி, காதிகாபூமி, வல்லீபூமி, உபவனபூமி, த்வஜபூமி, கல்பகவ்ருக்ஷபூமி, பவனபூமி, த்வாதசகோஷ்டபூமி, முதற் பீடபூமி, இரண்டாம் பீடபூமி, மூன்றும் பீடபூமி என்று பெயர் பெறும். இவற்றுள் எட்டாமதாகிய த்வாதசகோஷ்டங்களுள் முதற்கோஷ்டத்தில் கணதரர்முதலிய எழுவகை முனிவர்களும், இரண்டாங் கோஷ்டத்தில் கல்பவாஸி தேவியரும், மூன்றாங் கோஷ்டத்தில் ஆர்யகையர் முதலியோரும் இருப்பர். யானை, ஸிம்ஹம், மான் முதலியன பன்னிரண்டாங் கோஷ்டத்தில் இருக்கும். மூன்றும் பீடத்தின்மேல் 900 வில்லின் உயரத்தையுடைய 'கந்தகுடி' என்னும் மண்டபம் இருக்கும். அம் மண்டபத்து ஸிம்ஹாஸநத்தில் ஆயிரமிதழுடைய செந்தாமரையின் நடுவி லுள்ள ஸ்வர்ணகர்ணிகையில் நாலங்குத்தின்மேல் தீர்த்தங்கரர் எழுந் தருளி உபதேஸஞ் செய்வர். அவர் திருவாய்மலர்ந்தருளியவையே பிரதமாநுயோகம்முதலிய நான்கு பரமாகமங்கள். இவை கணதரருக்கு உபதேஸிக்கப்படும். 'வினையி னீங்கி விளங்கிய வழிவின், முனைவன் கண் டது முதனூ லாகும்' (மரபி. 94.) என்னுந் தொல்காப்பியச் சூத்திரம் ஈண்டு நினைக்கற்பாலது. திருவள்ளுவனார், [1] "மலர்மிசை ஏகினான்", [2] 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி' என்னுந் தொடர்-களில் அமைத்திருப்பதும் காண்க.

கேவலஞானம் அடைந்த தீர்த்தங்கரர் பின்னர், பல தேஸங் களுக்குச் சென்று தருமோபதேசஞ் செய்து மீள்வர். தீர்த்தங்கரர் 34 அதிஸயங்களே உடையர். அவர்கள் இறுதியில் ஏதேனும் ஒரு மலையில் பிரதிமாயோகதாரியாகி நின்று எல்லாக் கருமங்களையும் கெடுத்து உலகங்க ளெல்லாவற்றுக்கும் மேலதாகிய ஸித்திக்ஷேத்ரம் அடைவர். ஸித்த நிலையை அடைந்தவர் திருவடிபூண்டியிருந்தவிடத்தில் திருவடிகளே அமைத்து அவற்றை வணங்குதல் மரபு.

சக்ரவர்த்திகள்சரிதம்

சக்ரவர்த்திகள் பூர்வபுண்ணிய பலத்தால் இந்திரராகி, பின் பூமியில் அவதரித்து அரசாட்சிசெய்வர். அவர்களது படைக்கொட்டிலில்

1. குறள். 3. 2. குறள். 6.

சக்ரம் உற்பத்தியாகும். உடனே திக்விஜயஞ் செய்து ஷட்கண்டங்களை அடிப்படுத்தி மீண்டுவந்து அரசாள்வர். பின்னர், தீக்ஷித்து மோக்ஷம் அடைவர். இது சக்ரவர்த்திகள்சரித்தத்தின் சாதாரண நிகழ்ச்சி.

பலதேவர்முதலியோர்சரிதங்கள்

பலதேவ வாசுதேவர் இருவரும் ஒரே அரசனுக்கு மக்களாய்ப் பிறப்பர். முதற்பிறப்பில் அவர்களுக்குப் பகைவராய் இருந்தவர் பிறந்து பகைவ ராவர். அவரே ப்ரதிவாசுதேவர் எனப்படுவர். வாசுதேவப்ரதி-வாசுதேவர்களுக்குச் சக்ரம் உற்பத்தியாகும். பலதேவ வாசுதேவர்கள் ப்ரதிவாசுதேவனை வென்று மூன்று கண்டங்களை அடிப்படுத்தி ஆட்சிபுரிவர். அதனால் அவர்கள் அர்த்தசக்ரிகள் எனவும் படுவர். இறுதியில் பலதேவர் தீக்ஷித்து மோக்ஷம் அடைவர். வாசுதேவ ப்ரதிவாஸுதேவர்கள் நரகத்தை அடைந்து, காலாந்தரத்தில் மோக்ஷம் புகுவர்.

வைதிக இதிஹாஸபுராணங்களும் ஸ்ரீபுராணமும்

வைதிக ஸமயத்து இதிஹாஸவரலாறுகள் ஸ்ரீபுராணத்திலும் காணப்படுகின்றன. ஆயின், அவற்றுள் மாறுபாடுகள் பல உள்ளன.

இராமாயணம் : தசரதர் காசியில் வாழ்ந்து பின்னர் அயோத்தியில் ஆட்சி செய்தது ; ஜனகர் யாகத்தின்பொருட்டு இராமரை அனுப்புமாறு தசரதரை வேண்டிக்கொண்டது ; பின்னர், ராமலக்ஷ்மணர் தந்தையின் நியமனம் பெற்றுக் காசியில் வாழ்ந்திருந்தது ; ராமர் வனிஹாரத்தின் பொருட்டுச் சீதையோடும் லக்ஷ்மணனோடும் சித்ரகூடத்தில் தங்கி-யிருந்தது ; அங்கு இராமனைலக்கத்தை நாரதர் அடைந்தது ; அவர்-வரவினை இராமர் அறியாதிருந்தது ; நாரதர், இராமர் தம்மை அவ மதித்தாராக நினைத்து இராவணனிடஞ் சென்று சீதையின் அழகை வருணித்தது ; இராவணன் சீதையைக் கவர நினைத்து, பணிப்பெண்ணாகிய சூர்ப்பநகையை அங்கு அனுப்பியது ; அவள் சீதையின் கற்பினை அறிந்து இராவணனிடம் கூறியது ; இராவணன் மாரீசனோடு போய் வஞ்சனையால் சீதையை எடுத்துச் சென்றது ; அயோத்தியில் உற்பாதம் உண்டாயது ; தசரதர் தூதர்மூலம் இராமனுக்கு ஆறுதல் கூறியது ; கைலஸ்லையை பரதன் முதலியோர் அங்கு அடைந்தது ; சுக்ரீவ அணுமஹான்கள்-என்னும் வித்யாதரர் இராமரை அடைந்தது ; அணுமஹான் சீதையைக் கண்டு வந்து தெரிவித்தது ; மண்டோதரி சீதையைத் தேற்றியது ; இராமர் அணுமஹானைத் தூதுவிடுத்தது ; வாலி தன்னைச் சேர்த்துக்-கொள்ளும்படி இராமரிடம் தூது அனுப்பியது ; போரில் வாலியை லக்ஷ்மணன் கொன்றது ; பின்னர் விபீஷணன் இராமரைச் சார்ந்தது ; போரில் இராவணன் முதலிய வித்யாதரர் லக்ஷ்மணனால் இறந்தது ;

இறுதியில் இராமர் தீக்ஷித்து மோக்ஷம் அடைந்தது ; அணுமஹான் முதலியோர் தீக்ஷித்தது ; லக்ஷ்மணன் நரகம் அடைந்தது.

பாரதம் : பாண்டவர்வரலாறு, பாரதப்போர் முதலியன இப் புராணத்தில் மிக்க சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பாண்டுவிற்குக் குந்தியினிடம் கர்ணன் களவுப்புணர்ச்சியில் பிறந்தவன் ; யுதிஷ்டிரர்முதலியோர் பாண்டுவிற்கே பிறந்தவர் ; ஜராஸந்தன், துரியோதனன்முதலியோர்துணைக்கொண்டு எதிர்க்க, வாஸுதேவர், பாண்டவர்முதலியோர் துணைக்கொண்டு ஜராஸந்தனை வென்று அர்த்தசக்ரவர்த்தி யாயினர் ; பாண்டவர் நேமிஸ்வாமியிடம் தம் பூர்வவரலாறு அறிந்தனர் ; பாண்டவர் தீக்ஷித்து ஆதபயோகதாரிகளாய் இருக்கையில், துரியோதனன்மருமகன் சூர்யவரன் உபஸர்க்கம் செய்தான் ; பாண்டவர் அதற்குத் தளர்வின்றித் தவம் முடித்து முக்திபதம் அடைந்தனர். இவையே ஸ்ரீபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. அரக்குமாளிகையில் நீ வைத்தது, வாஸுதேவர் தூது, பாரதப்போர் முதலியன மஹாபுராணத்திற் கூறப்பட்டுள்ளன ; கன்னட நேமிநாதபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

;

பாகவதம் : வசுதேவன்வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருத்தல் அவன், மணிவிமார்பலரை மணத்தல் ; வஸிஷ்டன்என்னுந் தாபஸன் உக்ரஸேனனைக் கொல்ல நினைத்து அவனுக்குக் கம்ஸன்என்னும் மகனைப் பிறத்தல் ; கம்ஸன் வேறுஇடத்தில் வளர்ந்து வஸுதேவனுக்கு வைரிக் காரன் ஆதல் ; கம்ஸன் கிருஷ்ணனைக் கொல்ல ஏழுதெய்வங்களை ஏவுதல் ; யாதவர் காளயவனுக்கு அஞ்சி நகரம்விட்டுப் போதல் ; வாஸுதேவன் ஜராஸந்தனைக் கொன்று அர்த்தசக்ரவர்த்தி ஆதல் ; ப்ரத்யும்நனைத் தூமகேது என்பவன் எடுத்துச் சென்று வழியில் வனத்தில் விட்டுப் போதல் ; காளசம்பரன் என்னும் வித்யாதரன் அவனை எடுத்து வளர்த்தல் ; ப்ரத்யும்நன் நாரதரால் தன் வரலாறு அறிந்து துவாரகைக்குச் செல்லுதல் ; வழியில் அனேக விநோதச்செயல்களைச் செய்தல் ; இறுதியில் ருக்மிணிமுதலிய தேவியரும், ப்ரத்யும்நன் முதலிய குமாரரும் தீக்ஷித்தல் ; இவைபோன்ற வேறுபாடுகள் பல உள. பக்கம் 427 - 472 பார்க்க.

சில புராணக்கதைகள்

சிபிசக்ரவர்த்தி வரலாறு : மேகரதன் என்னும் அரசனை ஒரு புறு மரணம் அடைந்தது. புறுவினைத் தொடர்ந்த கழுகு புறுவினை நல்குமாறு அரசனை வேண்ட, அரசன் அவற்றின் வரலாறும் தானலகூறணமும் கூறி, செல்ல விடுத்தான். இது சிபிசக்ரவர்த்தியின் கதையினின்று வேறுபட்டுள்ளது காண்க.

பரசுராமன் வரலாறு : ஜமதக்நிக்கு மனைவியாகிய ரேணுகியின் தமையன் அவளுக்குக் காமஸுரபியென்னும் பசுவினையும், பரசுராம மந்திரத்தையும் கொடுத்தல் ; ஸஹஸ்ரபாகுவென்பான் தன் மகளோடு ரேணுகியின் வீட்டை யடைந்து, மீண்டு போகும்பொழுது சுரபியைக் கவர்ந்து ஜமதக்நியைக் கொன்று தன் நகரம் அடைதல் ; ரேணுகீபுத்திரர் இந்திரராமனும் ஸ்வேதராமனும் சினங்கொண்டு ஸஹஸ்ரபாகுவினையும் அவன்ஸந்தானத்தினையும் அழித்தல் ; கருப்பவதியாகிய ஸஹஸ்ரபாகு-தேவியை அவள்தமையன் அழைத்துப் போதல்; அவள்புத்திரனுகிய ஸுபௌமன் ரேணுகீபுத்திரரைக் கொல்லுதல். இவைபோன்ற சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. க்ஷத்ரியவம்சத்தை அழித்ததொன்றே இருவகைப் புராணங்களிலும் உள்ள ஒற்றுமை.

மஹாபலியின் வரலாறு : ஹஸ்தினபுரத்தில் ஆண்ட மேகரதனுக்கும் பத்மாவதிதேவிக்கும் விஷ்ணு, பத்மரதன் என்னும் புத்திரர் பிறத்தல் ; மேகரதனும் விஷ்ணுவும் தீக்ஷித்தல் ; பத்மரதன் அரசனுதல் ; அவன்மந்திரி பலி என்பான் அவைக்களத்தில் அகம்பனர்என்பாரோடு வாதம்பண்ணித் தோற்றமையால், அகம்பனர்மேல் வைரங்கொள்ளுதல் ; பகைவர் பத்மரதனைத் தாக்க, பலி உபாயப்பிரயோகத்தால் அடக்குதலும் மகிழ்ந்த அவன், பலியின்விருப்பத்திற் கிணங்கி ஏழுநாள் அரசு செலுத்துதற்கு அனுமதி அளித்தல் ; பலி அதுவே தக்க சமயம் என்று கருதி, அதிதிதேவதாபூஜை என்ற வியாஜத்தால் அகம்பனர்முதலிய தபோதனர் இருந்த ஸௌம்யகிரியைச் சூழத் தீயைக் கொளுத்துதல் ; அதனை அறிந்த விஷ்ணுமுனிவர் பத்மரதனை அடைந்து அக் கொடுமையை நீக்குமாறு வேண்ட, அவன் தன்னுல் ஆகாத காரணத்தைக் கூறி அவரையே நீக்கிக்கொள்ளுமாறு வேண்டுதல் ; அவரும் வாமனரூபத்தோடு மறையவனுகிச்சென்று பலியை மூவடி மண் வேண்டல் ; காரைவார்த்துக் கொடுக்கப் பெறுதல் ; பின்பு விக்கிரமனுகி ஓரடியை மானுஷோத்தர பர்வதசிகரத்திலும் மற்றொன்றனை மந்தரசூளிகையிலும்போக்கி விண்ணுற நிமிர்தல் ; அவர்பராக்கிரமத்தைக் கண்ட வித்யாதரராஜாக்கள் வீணை-கொண்டு இனிமையாகப் பாடி வேண்ட, விஷ்ணுமுனிவரும் பாதங்களை ஒடுக்கியருளல் ; மூன்றும் அடிக்கு இடந்தர வற்புறுத்திப் பலியின் தீச்-செயலைத்தவிர்த்தல்; பலியை வதம்பண்ண ஒருப்பட்ட பத்மரதனைவிலக்கி, பலிக்குத் தருமோபதேசஞ் செய்து செல்லுதல். இவைபோன்ற பல மாறுதல்களைக் காணலாம். மூவடி மண் வேண்டி நெடிய வுருவெடுத்தது ஒன்றே இரண்டு புராணங்கட்கும் உள்ள ஒற்றுமை.

'அஜைர் யோதவ்யம்' என்னும் வாக்கியத்திற்குப் பர்வதன்-என்பவன் ஆடுகளால் யாகஞ் செய்யவேண்டும் என்று பொருள் கூற, அவனோடு கற்ற நாரதன்என்பவன் அதனை மறுத்து, முளைக்குத் திறமை யற்ற நெல்லரிசியினால் யாகஞ் செய்யவேண்டும் என்று வாதித்தான். பின்னர் இருவரும் தம்மொடு கற்ற வஸுராஜனால் தம் ஆசிரியன்கருத்தை அறிவது என்று முடிவு செய்துகொண்டு அவனிடஞ் சென்ல, அவன் பர்வதன்பக்ஷபாதியாய்ப் பொய் கூற, அதனால் நிலத்துள் ஆழ்ந்தான். இவ்வரலாறு மாஹிஸ்மதீஸ்வரதஸ்வாமிபுராணத்தில் கூறப்பட்டுளது. ஆயின், தேவர்கள் ஆடுகளால் யாகஞ் செய்ய வேண்டும் என்று சொல்ல, முனிவர்-கள் அதனை மறுத்துக் கூறினர்; பின்னர் அவ் விருதிறத்தினரும், ஆகாயத்திற் செல்லுந் திறன் வாய்ந்த உபரிசரவஸுவென்னும் அரசனிடம் வினவ, அவன் தேவபக்ஷபாதியாகிக் கூற, உடனே ஆகாய கமனம் ஒழிந்து கீழே விழுந்தான் என்று [1] ஸ்ரீமஹாபாரதத்தில் கூறப்பட்டுளது.

முக்கியமான ஜைனக்கொள்கைகள்

ஸ்ரீபுராணத்தில் ஆங்காங்கு ஜைனசமயக் கொள்கைகள் கூறப் பட்டுள்ளன; சந்திரப்ரபஸ்வாமிபுராணத்திலும் நமிநாதஸ்வாமிபுராணத் திலும் சில கொள்கைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆயினும், முக்கிய மான சிலவற்றைமட்டும் இங்குக் குறிக்கின்றேன்: இவ்வுலகம் முதலும் முடிவும் இல்லாததாதலின் இதற்கு ஸ்ருஷ்டிகர்த்தா இல்லை. மக்கள் தவத் தால் வினைகளைக் கெடுத்து அனந்தசதுஷ்டயங்களை அடைந்து இறை-மையை பெறலாம். மகளிருக்கு வீடுபேறு இல்லை. ஜீவர்களுள் மோக்ஷமடை-யும் பேறு இல்லாதவர் சிலர் உளர். அவர், எத்துணை நேரம் வேகவைக்கி-னும் வேகாத பயறு போன்றவர். 'பயற்றுக்கறி வேவாதற்றால்' என்று [2] அறநெறிச்சாரம் கூறுவது காணத்தக்கது. அஃறிணையுயிர்களும் உப தேசங் கேட்பதனாலும் நோன்பு மேற்கொள்ளுதலாலும் ஸ்வர்க்கபதம் பெறுதல் கூடும். நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் என்னும் ரத்னத்ரயத்தை அனைவரும் மேற்கொள்ளுதல்வேண்டும். பஞ்சபரமேஷ்டி-களை நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். யாகம் முதலியவற்றினும் உயிர்க் கொலையும் பாவனையும் (நாமஸ்தாபனையும்) கூடா. ஸம்யாஸ்தமயத் திற்குப் பின் உணவுட்கொள்ளுதல் ஆகாது பிறர்செய்யுந் தீங்குகளைத் தங் கர்மபரிபாகமென் றெண்ணுதலேயன்றி அவர்கட்குத் தீங்கு செய்ய எண்ணுதல் தீமை தரும்.

---

1. மஹாபாரதம், மோக்ஷதர்மம். (ஸ்ரீவசன. 205 பார்க்க.)
2. அறநெறிச். 32.

இல்வாழ்வோர், ஸாகாரர் என்றும் ஸ்ராவகர் என்றும் வழங்கப் படுவர். அவர்கள் பதினொரு நிலையின ராவர். அவர்களுக்குச் சில நோன்புகளும் அணுவ்ரதம் முதலிய விரதங்களும் விதிக்கப்பட்டுள்ளன. அணுவ்ரதம் 5. அவையாவன: இரண்டுஇந்திரியம்முதலாகவுள்ள உயிர்களைத் துன்புறுத்தாமை, பொய் சொல்லாமை, களவு செய்யாமை, பிறர்மனை விழையாமை, லோபமின்மை. குணவ்ரதம் 3. அவையாவன: திக்வ்ரதம், தேசவ்ரதம், அனர்த்ததண்டவ்ரதம். போக, உபபோக வஸ்துக்களை அளவுபடுத்திக்கொள்வதுவே இவ் விரதத்தின் நோக்கம். ஶிக்ஷாவ்ரதம் 4. அவையாவன: ஸாமாயிகம், ப்ரோஷதஉபவாஸம், போகோபபோக பரிமாணம், வையாப்ருத்யம் என்பன.

இவற்றுள் அணுவ்ரதம் என்றவை துறந்தோரால் அனுஷ்டிக்கப் படின் மஹாவ்ரதம் எனப்படும். இவற்றை நோக்கின், பிராணிகளைத் துன்புறுத்தாமைமுதலியன இல்வாழ்வோரால் முற்றும் மேற்கோடல் இயலாமையின் அணுவ்ரதம் எனவும், துறந்தோரால் இயலுமாகலின் மஹாவ்ரதம் எனவும் வழங்கப்பட்டன என்பது புலனாகும். திருவள்ளுவனார், பிறனில்விழையாமை வெஃகாமை தீவினையச்சம் என்று இல்லறவியலிற் கூறியவற்றையும், கூடாவொழுக்கம் அவாவறுத்தல் இன்னாசெய்யாமை என்று துறவறவியலிற் கூறியவற்றையும் ஈண்டு நோக்குதல் வேண்டும். அவர், லோபமின்மையையே ஈகை என்னும் அதிகாரத்திற் கூறினாராவர். இனி, அணுவ்ரதங்களினுட்பட்ட கள்ளாமை பொய்சொல்லாமை(வாய்மை) இவற்றைத் துறவறவியலிற் கூறியதன் கருத்து, 'இல்வாழ்வார்க்காயின் தமரோடுவிளையாட்டுவகையில் அவரை வஞ்சித்துக்கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம்கொள்ளினும் அமையும், துறந்தோர்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காமாகலின், இது துறவற மாயிற்று' என்று பரிமேலழகர் கள்ளாமையிடலில், எழுதியுள்ள உரையான் அறியலாகும்.

இனி, ஆசிரியர் திருவள்ளுவனார்,

[1] 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'

என்று கூறிய இலக்கணத்தின்படி அமைந்த தவம் ஜைனசமயத்தில் தவம்புரிந்தவரிடத்தேயே உண்மை அறியப்படுகின்றது. தமக்குத் தீங்கு புரிந்தாருக்குத் தீமை நினைக்காமலும் அத் துன்பத்தை உள்ளங்கொள்ளாமலும் தவம் புரிந்துள்ளோர்பலரது வரலாறு ஶ்ரீபுராணத்திற் காணலாகும்.

[2] 'கறுத்தின்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள்'

என்பது இவர்பக்கலிலே பொருந்துவதா யுளது. இவை நிற்க.

1. குறள். 261. 2. குறள். 312.

வைதிகசமயத்துக்கும் ஜைனசமயத்துக்கும் உள்ள ஒற்றுமை

சில கொள்கைகள், வைதிகசமயம் ஜைனசமயம் இரண்டிலும் உள்ளன. அவை: உயிர்களுக்குக் கருமங்களால் பிறப்பு உளதாகின்ற தென்பது; தவத்தால் கருமங்களைக் கெடுத்தவழி அவ்வுயிர் வீடு பெறும் என்பது; நல்வினை தீவினைகளும் அவற்றின் பயன் துய்க்குமிடங்களாகிய துறக்க நரகங்களும் உண்டு என்பது; யுகங்களின் இறுதிக்காலத்தில் மக்களின் உயரம் வாழ்நாள் முதலியன மிக்க குறைவாயிருக்கும் என்பது முதலியன. இனி, நான்குஜாதிகள் நான்குஆசிரமங்கள் இவை இரண்டு சமயங்களிலும் கொள்ளப்பட்டுள்ளன. ஜைனசமயம் பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்று கூறுகின்றது. வைதிகசமயம் வேதாத்யயனஞ் செய்தற்கு உரியரல்லாத நான்காம்வருணத்தவருக்கு ப்ரஹ்மவித்யையின் அதிகாரமே இல்லை என்று கூறுகின்றது. பிராணிஹிம்ஸை இல்லாத யாகமே முனிவர்கள்கொள்கை என்பது மஹாபாரதத்தில் உபரிசரவஸு-சரித்திரத்திலுல் தெரியவருகின்றது. வீடு பெற்ற பெரியோர்களைப் பிரதிஷ்டித்து வணங்கும் வணக்கம் இரண்டு சமயங்களிலும் வழக்காறே. இவ்வாறு இன்னும் பல கொள்கைகள் ஒற்றுமையுடையனவா யுள்ளன.

ஸ்ரீ புராணம்

மஹாபுராணஸங்க்ரஹத்தின் மொழிபெயர்ப்பே நமது ஸ்ரீ புராணம். இதனை, 'இதி த்ரிஷஷ்டிலக்ஷண மஹாபுராணஸங்க்ரஹே வ்ருஷபஜிநபதி ஸரதசக்ரவர்த்தி புராணம் இதம் பரிஸமாப்தம்' என்று எழுதியிருப்பதனுல் அறியலாகும். இவ்வாறே ஒவ்வொரு புராணத்தின் இறுதியிலும் 'இதி த்ரிஷஷ்டிலக்ஷண மஹாபுராண்ஸங்க்ரஹே' என்று வருவது காண்க.

ஸ்ரீ புராணம், மஹாபுராணஸங்க்ரஹத்தின் நேரான மொழி பெயர்ப்பேயாயினும், நகரம் அரண்மனை முதலியவற்றின் வருணனை, அரசர்முதலியோரின் அங்கவருணனை முதலியன பல, ஸ்ரீபுராணத்தில், விடப்பட்டுள்ளன. அவை: [1] கந்திலதேய வருணனை, [2] விஜயார்த்தபர்வத வருணனை, [3] அளகாபுரியின் வருணனை, [4] ஸ்ரீமதியின் கல்யாணமண்டப வருணனை, [5] மஹாபூதஜினுலய வருணனை [6] வஜ்ரஜங்கன் வருணனை

1.	பர்வம்	4.	54—80.	4.	பர்வம்	7;	211—219.
2.	,,	4.	86—103.	5.	,,	6:	180—190
2.	,,	4·	194—121.	6.	,,	6.	30— 47

[1] ஸ்ரீமதியின் அங்கவருணனை, [2] மருதேவியின் வருணனை, [3] தேவஸ்த்ரீகள் மருதேவியோடு இன்புரையாடியது, [4] வ்ருஷபதேவர் ஜன்மாபிஷேகம் முதலிய வருணனை, [5] பரதனது இளமை உருவம் முதலிய வருணனை, [6] பாஹுபலிகுமாரனங்கவருணனை முதலியன. அன்றியும், தபோத்யான விஷயம் கூறப்பட்டுள்ள பருவம் (21) முழுவதும் விடப்பட்டுளது. வருணனை முதலியன செய்யுளிற் சிறந்து இன்பந் தந்து விளங்குவது போன்று உரைநடையில் இன்பந் தாரா என்று கருதி விடப்பட்டிருக்கலாம். அன்றி, அவை அத்துணை முக்கியமானவையல்லவாகலின் விடப்பட்டனவாகலாம்.

மூலத்தில் இல்லாதன ஒரு சில ஆங்காங்குக் காண்கின்றன. அவற்றை உரியவிடங்களிற் கீழ்க்குறிப்பிற் காணலாகும். சில விடங்களில் கதை சிறிது முன் பின் மாறியுளது. அவற்றுட் சில ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள.

வடமொழிப்புராணத்துள் ஒன்றனையும் விடாமல் ஸ்ரீபுராணங் கூறியிருப்பின் இன்னும் பல அரிய பொருள்களை அறியும் பேறு நமக்கு வாய்த்திருக்கும். உதாரணமாக— விவாஹசடங்குகள், கர்ப்பாந்வய க்ரியைகள், தீக்ஷாந்வய க்ரியைகள், கர்த்ரந்வயக்ரியைகள், ப்ராஹ்மண லக்ஷணம் முதலியன வாகும். இனி, இவையேயன்றி வேறு சிலவற்றையும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

1 இழைகளின் வேறுபாடு :

நடுவில் பெரிதாய முத்துள்ள இழைக்கு ஸ்ரீர்ஷகம் என்பது பெயர்.

நடுவில் முறையே ஒன்றற்கொன்று பெரியதாய மூன்று முத்துக்கள் உள்ள இழை உபஸ்ரீர்ஷகம்.

நடுவில் ஒன்றற்கொன்று பெரிதாய ஐந்து முத்துக்கள் உள்ள இழை ப்ரகாண்டகம்.

நடுவில் முறையே ஒன்றற்கொன்று சிறிதாய முத்துக்களாலாய இழை அபகாடகம்.

எல்லாவிடத்தும் ஸமமான முத்துக்கள் உள்ள இழை தரளப்ரதி பந்தம்.

இழைகளின் ஸமூஹம் ஹாரம் எனப்படும்.

இழைகளின் தொகைவேறுபாட்டால் ஹாரம் பதினைருவகை ஆகும்.

1.	பர்வம்.	6.	62— 81.	4.	பர்வம்	13.	123, 14	159.
2.	,,	12.	13— 65.	5.	,,	15.	160.	218.
3.	,,	12.	176—215.	6.	,,	16.	10.	22.

1008 இழையுள்ள ஹாரம் இந்த்ரசந்தம். (இதனைத் தேவேந்திரர் சக்ரவர்த்திகள் தரிப்பர்.)

504 இழையுள்ள ஹாரம் விஜயசந்தம். (இதனை அர்த்த சக்ரிகள் பலதேவ காமதேவாதிகள் தரிப்பர்.)

108	,,	,,	ஹாரம்.
81	,,	,,	தேவசந்தம்.
64	,,	,,	அர்த்தஹாரம்.
54	,,	,,	ரஸ்மிகலாபம்.
32	,,	,,	குச்சம்.
27	,,	,,	நக்ஷத்ரமாலிகை.
24	,,	,,	அர்த்த குச்சம்.
20	,,	,,	மாணவம்.
10	,,	,,	அர்த்த மாணவம்.

மேற்கூறிய ஹாரங்களின் நடுவில் மணி பதித்தால் அவை இந்த்ர சந்த மாணவம், விஜயசந்த மாணவம் என்னுந் தொடக்கத்துப் பெயர் பெறும்.

இவ்வாறே இன்னும் பல இழைவிசேடங்கள் உள. நிற்க.

2. மநுஷ்யருக்குப் பிறப்பினால் ஏற்படும் ஜாதி ஒன்றே; தொழில்-வேறுபாட்டால் நான்கு ஆகின்றது.

ப்ரதமஸ்ம்ஸ்காரத்தால் ப்ராமணரும், படைகளைத் தரித்தலால் க்ஷத்ரியரும், ந்யாயமாகப் பொருள்செய்தலினால் வணிகரும், தாழ்வாகிய தொழிலினால் ஶூத்ரரும் ஆகின்றனர்.

3. ப்ரதரங்வய ஸ்த்ரியினால் குலம் என்று சொல்லப்படுகிறது; மாதரங்வயஸ்த்ரியினால் ஜாதி என்று வழங்கப்படுகின்றது. (39 : 85)

4. க்ஷத்ரிய வ்ருத்தம் 5—குலபாலனம், மதிபாலனம், ஆத்மபாலனம், ப்ரஜாபாலனம், ஸம்ஜ்ஞத்வம் என்னும் ஐந்து. இவற்றின் விவரணம். (42 : 5-203)

5. தண்டனை 3—கொல்லுதல், துன்புறுத்துதல், எல்லாப்பொருள்களையுங் கவர்தல். (45 : 46)

6. கோசம் 4—அரதனம், பொன், வெள்ளி, வழக்கிலுள்ள நாணயம். (45 : 185 உரை)

இவை முதலான பல அரும்பொருள்களை அறியலாகும்.

ஸ்ரீபுராண யாப்பு

ஸ்ரீபுராணம் மணிப்பிரவாளநடையில் அமைந்துளது. மணிப்பிரவாளமாவது—இருமொழிச்சொற்கள் விரவி, கற்போருக்கு இன்பம் பயக்குமாறு அமைந்ததோர் நடை. ஈண்டு இருமொழியாவன—வடமொழியும் தென்மொழியும். மூத்தும் பலமுறை கோத்தாற்போன்று வடமொழி தென்மொழிச்சொற்கள் விரவிய நடையை மணிப்பிரவாளம் என்ப. ஆயின், மலையாளமொழியில் மணிப்பிரவாளவிலக்கணநூலாகிய லீலாதிலகத்தில், மாணிக்கமணியும் பலமுறை கோத்ததொரு வடம் காட்சியில் நிறவேறுபாடு தோன்றுது விளங்குதல்போன்று வடமொழிச் சொல்லியும் மலையாளச்சொல்லியும் விரவி வேறுபாடு தோன்றுவாறு அமைத்த நடை மணிப்பிரவாளம் என்று கூறப்பட்டுளது. வேறுபாடு தோன்றுமையாவது—வழக்கிற் பயிலும் வடசொற்களே விரவின், அவை நாட்டுமொழிச்சொற்களேபோல், கற்போருக்கு எளிதிற் பொருள் விளங்கிநிற்பதாம். இம்முறையின் இயன்றுள்ளதுவே சிறந்த மணிப்பிரவாளம் என்பது அக் நூலாசிரியர்கொள்கை. தமிழிலுள்ள 'வீரசோழியம்' என்னும் நூலில்,

> 'இடையே வடவெழுத் தெய்தில் விரவியல் ஈண்டேதுகை
> நடையேது மில்லா மணிப்பிர வாளநற் நெய்வச் சொல்லின்
> இடையே முடியும் பதமுடைத்தாம்'

என்று கூறப்பட்டிருத்தலின், மணிப்பிரவாளநடையில் வடசொற்கள் விரவுதல் இலக்கணவமைதி ஆயிற்று. 'மணிப்பிரவாளத்தினுக்கும் விரவியல் செய்யுட்களுக்கும் வடவெழுத்து வருக என்று சிறப்பிலக்கணம் உண்மையால் அவற்றில் வடவெழுத்து வருவது குற்றமன்று' (அலங். 2. உரை) என்னும் உரையினுல் மணிப்பிரவாளநடையில் வடவெழுத்துக்களைச் சேர்த்து எழுதுதலும் அமைதியே என்பது அறியப்படும்.

வடமொழி வேற்றுமையுருபேற்ற பெயர்ச்சொற்களும் வடமொழி வினைச்சொற்களும் வரப்பெற்ற நூலே மணிப்பிரவாளக்ரந்தம் எனப் பெயர் பெறும். இந் நியதியின்படி அமைந்துள்ள பெயர்ச்சொற்களும் ஸ்ரீபுராணத்தில் பல விடங்களில் வந்துள்ளன; வினைச்சொற்களும் ஓரோவழி அருகி வந்துள்ளன. ஓரோவழி, பல வாக்யங்கள் வடசொற்களாலே அமைந்தும் உள்ளன. இவற்றாலே ஸ்ரீபுராணம் மணிப்பிரவாளக்ரந்தம் ஆயிற்று. இவற்றுக்கு முறையே உதாரணம்:

'தத்காரணேந ஸம்ஸாரவிரக்தஞ்சிய ஸுதராம் லைகாந்திக
தெவலொயிதஞ்சிய பின்,' (பக். 344)

'அறிந்து, ஸுவேந மயநத் திருந்தனனுக, தத்தம் முறைமையினைச் செய்வாராதலில் ஸுரவரர்கள் ஸவிநயமாக நமஸ்கரித்து நின்று. (பக். 36)

'நமோஸ்து மேவராயாய மஹீயராய என்று நமஸ்காரவசநஞ் சொல்லுதலும்.' (பக். 315)

'ஸர்வஜீவஸ்ய மித்ரஹாவமாவது.' (பக். 504)

'ஹிதலே ஸர்வஸஸ்யாநி ஸஜீவியாவது.' (பக். 504)

'அர்க்ககிர்த்திமஹாராஜனும் விபுலமதிசாரணர்ஸமீபத்தே தீக்ஷித்து முக்திபதம் அவாப.' (பக். 282)

'முடிவின்கண் ஆராயநாவியியால் ஸரீரபரித்யாகஞ் செய்து அச்யுதகல்பத்து ப்ரதீந்த்ரோஜாதः.' (பக். 299)

அய, தீயங்கர சக்ரயர வலதெவ வாஸுதெவ ப்ரதிவாஸுதெவ த்ரிஷஷ்டி ஸலாகாபுருஷ மஹாபுராணம் இதம் ஆவ்யாதும் ஆரஹுதே.

அயெதாநீம் அஜிதஜிநேந்த்ர புராணம் அபிவர்ண்யதே.

இவ்வாறு ஒவ்வொரு புராணத்தின் முதலிலும் அமைந்திருப்பதல்லாமல், இடையிலும்,

இனி, 'சதுர்கதிஷு பரிஹ்ரமணம் ஸம்ஸாரः; தத்காரணம் கர்ம வஸுநம்' என்றும், (பக். 216)

'முஜஹர்ஸுநாத் புத்ரः; வ்ருஷஹஹர்ஸுநாத் மஹீரः; ஸிம்ஹஹர்ஸுநாத் அநந்தவீர்யः; சந்த்ரஹர்ஸுநாத் ஸர்வஜநரஞ்ஜகः; ரவிஹர்ஸுநாத் தேஜஸ்வீ; பத்மாகரஹர்ஸுநாத் ஆத்ரிஸல் லக்ஷணயரः; ஸங்வஹர்ஸுநாத் சக்ரவர்த்தீ; கும்ஹஹர்ஸுநாத் ரத்நநியீ நாமயிபः இதி' (பக். 275) என்றும் வந்திருப்பன காண்க.

ஸ்ரீபுராணத்துட் சில விடங்களில்—முக்யமாக ஸமயக்கொள்கைகளை விவரிக்குமிடங்களில்—வடமொழிச்சொற்கள் சாலப் பயின்று வந்துள்ளன. சில விடங்களில், பெரும்பாலும் வடசொல் விரவாது இயல்வதும் உண்டு. தனித்தமிழில் அமைந்துள்ள வாக்கியங்களையும் ஆங்காங்குக் காணலாகும். இவற்றுக்கு முறையே உதாரணம்:

'அவற்றுள் மியூராத்வப்ரகூத்யுதயவேறுபாட்டினுகிய மூல ஸம்ஸய விபர்யஸஸ்வரூபத்ததாகிய மியூராத்வபரிணமத்தால் ஸர்வஜ்ஞ வீதராகப்ரதிதத்த்வங்களில் அஸிருசியின்றி, அநாப்தாதி விஷயாஹி லாஷ ரூபத்தில் நிகழ்கை மியூராஹர்ஸுநம். அதனை யுடையான் மியூராஹ்வஷ்டிः. மியூராத்வகர்மோதயத்தினுல் அநாதியாகவே மியூராஹ்வஷ்டியாகிவாராநின்றமுற்கு ஆஸந்நஹவ்யத்வமும் தூரவ்யாதி ஸாயந பஞ்சகமும் தலைப்பெய்துவிடத்து அயஃப்ரவ்ருத்தாபூர்வகரண அநிவ்ருத்தி

கரணம்என்னும் கரணத்ரயஸுஹபரிணுமங்களே நிகழ்த்தி அதிவ்ருத்தியது அந்திமஹாமத்து உதயஞ் செய்யாநின்ற மியூர்த்வகர்மத்தினுக்கு அந்தரகரணஞ் செய்து மியூர்த்வோதயம் இலதாகும்.' (பக். 217)

'க்ஷேத்ரபரிவர்த்தநம் என்பது—மஹாமேருபர்வதத்து மூல மயூமாகிய சித்ரையுள் சதுரணுப்ரதெஸுமும் வஜ்ரையுள் சதுரணுப்ரதெஸுமும் என லோகமயூமமாகிய அஷ்டாணுப்ரதெஸங்களைத் தனது ஸரீரத்துக்கு மயூமமாக ஒரு ஜந்மந்தொடங்கி உத்ஸேயவநாங்ஸுலாஸங்-வெயப்ரதெஸுமாத்ரமாகிய ஸ்வதெஹப்ரதெஸுமாத்ரமாகிய அஸங்வெய ஜந்மம் அவ்விடத்தே பிறந்து, பின் ப்ரதெஸொத்தரமாக அயொலோக ஊர்யலோகங்களையெல்லாம் முற்றப் பிறத்தலாகும்.' (பக். 407)

'அதற்பின் ஒருநாள், அஸோகவநம் என்னும் உத்யாநவநத்து, சந்த்ரகாந்தஸிலாதலத்து ஏகாந்தமாகவிருந்து, ஸ்ரீமதியை நோக்கி, பண்டிதை உபலாளித்துச் சொல்லுவாள்: 'கந்யகையே, யான் ஸர்வகார்யங்களிலும் ஸமர்த்தெயாதலில் பண்டிதை என்னும் யதார்ய நாமத்தை யுடையேன். யான் உனக்கு ப்ராணஸகியாகவும் மாதாவாகவும் நிஜனந்து, உனது மௌநவ்ரத காரணத்தை அறிவிப்பாயாக. என்னுல் ஸாயூமாகாத காரியம் இல்லையென்று கருதுவாயாக. உனது ஹ்ருதயமத மாகிய விகாரம் யௌவநாவஸ்த்தெயில் தோன்றுவது யாதானும் ஒரு மஹதோத்பாதம்ஒன்றே, மஹாவேஸம்ஒன்றே என் றறிகின்றிலேன். இதனை உள்ளபெற்றி யறிவிப்பாயாக' என்று நிர்வந்தத்தினுற் சொல்ல, கேட்ட ஸ்ரீமதியும் சிறிது லஜ்ஜை நீங்கிச் சொல்லுவாள்.' (பக். 39, 40)

'அதற்பின் ஏழுநாள் தவழ்ந்து திரிவர்; அதற்பின் ஏழுநாள் தளர்நடை நடந்து திரிவர்; அதற்பின் ஏழுநாள் மழலைச்சொல் மொழி வர்; அதற்பின் ஏழுநாள் தளர்வின்றி நடந்து திரிவர்.' (பக். 12)

இவை நிற்க.

ஸ்ரீபுராணத்தில் ஒவ்வொரு புராணத்தின் தொடக்கத்திலும் அப் புராணநாயகராகிய தீர்த்தங்கரரைக்குறித்து, ஆசிரியர், தாம் இயற்றியதொரு ஸ்லோகத்தை அமைத்துள்ளார்; அன்றி, ஓரோவழி, புராணத்தின் இடையிலும் இறுதியிலும் தாம் இயற்றிய ஸ்லோகங்களை அமைத்துள்ளார்; வேண்டுமிடங்களில் 'மஹாபுராண' ஸ்லோகங்களை எடுத்தாண்டுள்ளார். இராமாயணவரலாற்றில்மட்டும் தமிழ்ச்செய்யுட்-கள் சில குறிக்கப்பட்டிருக்கின்றன. மல்லிநாதபுராணத்தில் பெரியதோ ராலமரத்தின் வருணனை ஆசிரியப்பாவில் அமைந்துளது. இராமாயண வரலாற்றில் தரப்பட்டுள்ள செய்யுட்கள் தமிழ்நாட்டில் முன்பு வழங்கிய-

தோர் இராமாயணக்காப்பியத்திலிருந்து எடுத்தனவாகலாம். அவற்றுள் சிலசெய்யுட்கள் சொற்பொருள் நயம் மிக்கனவா யுள்ளன.

ஸ்ரீபுராணத்தின் நடை ஒழுகிய ஓசையதாய் மனோஹரமாய் அமைந்துளது. வாக்கியங்கள் பெரும்பாலுஞ் சிறியவையாயிருப்பினும் விஷயத்துக் கேற்ப நெடியனவாயும் உள்ளன. உதாரணம்:

'அவன்பின், அஸங்க்யாதகோடி மன்வந்தரம்வர்ஷ மிறந்தபின், நாஹிமஹாராஜன்னன்னும் பதினான்காம் மநுத் தோன்றினன். அவனுயுஷ்யம் பூர்வகோடி; உத்ஸேயம் ஐந்நூற்றிருபத்தைந்து வில்லு. அவன்காலத்து ப்ரஜைகள் நாஹிநாளத்தோடுகூடிப் பிறந்தார். அதனைப் போக்கும் உபாயத்தினை உபதெரிசித்தலில், நாஹிஎன்பது நாமமாயிற்று. அவன்காலத்து, மேகங்க ளெழுந்து மழைபொழிந்தன; எல்லாயாங்யங்களும் உழுதுவித்தாமல் காலஸ்வபாவத்தால், தானே விளைந்தன. கல்பவ்ருக்ஷங்கள் மறைந்தபின், நாநாவித்யமாகிய வ்ருக்ஷங்கள் தாமே தோன்றி பலித்தன' (பக். 17.) என்னுமிடமும்,

'இவ்வழியால், கர்மங்களை ஸாரஸ்யமாகவுடைய ஆத்மாவே ஸரீரேந்த்ரியஸுகதுஃகாதிகளதுவேறுபாட்டினைச்செய்கின்றன்என்பது உத்பத்திஹேதுவிஷயதடாதலில், ஈஸ்வரனால் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களையுடைத்தன்றி, நித்யஸ்வபாவவஸ்துவாகி, அடியில் வேத்ராஸநமும் இடையில் கல்லரியும் முடிவில் உரகாஸநமும்போன்ற ஸம்ஸ்தாநத்தினை உடைத்தாகி, வாதோத்தி வாதநவாத தநுவாதம் என்கின்ற மஹாவாத வலயங்கள் மூன்றுகளால் பரிவேஷ்டிதமாகிய லோகத்து மத்யமமாகிய மத்யமலோகத்து, அஸங்க்யாத த்வீப ஸமுத்ரங்கள்என்னும் அவதிபதிகள் புடைசூழ்தர, லவணஜலவலயமேவலயாலும் வேதிகாகடிஸூத்ராதி விவிதஸோபாணங்களாலும் அதிரமணீயமாக அழகொளி பெருக மஹாமேரு என்னும் மணிமகுட மலர்சூடி அரசுவீற்றிருந்த ஜம்பூத்வீபம் என்னும் த்வீபராஜனது, நிஷத நீல குலபர்வதங்களென்னும் உபயபார்ஸ்வங்களும் மத்யத்து வ்ருத்தா வ்ருத்தோத்தாநத்வீப்ரவாஹம்என்னும் முக்தாஹாரத்தினால் விளங்கிய மஹாவிதெஹவர்ஷம் என்னும் வக்ஷஸ்ஸ்தலத்து லக்ஷ்மீபோன்றது மநுவீலை என்பது நாடி விளங்குகின்றது' (பக். 22) என்னுமிடமும் உதாஹரணமாகக் காண்க.

நெடியவாக்கியங்கள் சிலவற்றில் வினைமுதல் இரண்டுமுறை தரப்பட்டுள்ளன.

'இவனுடனுங்கூடப் போகி ஒருகாள் யான் ஸம்மேதபர்வதத்து சிலகூடம்என்னும் தீர்த்தஸ்தாநத்து ஹரிவம்ஸோத்பவராஜர்ஷிபரமேஸ்வரவம்ஸோத்பந்நராஜமாகச் சென்றிருப்ப, அங்கே ஸங்கிஹிதனாகிய நாரதனை விநயோப

சாரஸஹிதமாக அடைந்து, "பூஜ்யனே, எனக்கு ராஜ்யப்ராப்தி என்று ஆவது?' என்று வினவ, அவனும் "உசராயமஹாராஜபுத்ராகிய ராமலக்ஷ்மணர்கள் அர்யஹாதாயிபதிக ளாகுவர். அவர்களே அடையவே அகிலஷிதகார்யம் ஆகும். ஒருநாள் வஸந்தகாலத்து ராமலஹூன் வீதா-தெவியோடுங்கூட வநவிஹரணம் பண்ணுகிற்ப, ராவணன் வஞ்சநாப்ர யோமத்தால் வீதாதெவியைக் கொண்டுபோகி லங்காநமரம் அடைவித் தனன். அதனை யறிந்த ராமலஹூன் லங்காநமரப்ரவேஸஸமர்யராயி-ஞரை இப்பொழுது தேடுகின்றனன். அவனது கார்யத்தை முடிக்கவே, உமக்கு ராஜ்யப்ராப்தி ஆகும்" என்று நாரதன் சொல்ல. கேட்டு ஸ்வாமி-ஸமீபம் அடைந்தனம்' என்று சொல்லிய விஹ்ராயராகுமாரனுக்கு அகிக ஸம்மாநஞ் செய்திருந்தபின், அணுமஹாந் சொல்லுவான். (பக். 387)

ஈண்டு, 'அவனும்' என்றும், 'நாரதன்' என்றும், எழுவாய் இரு முறை வந்துள்ளன.

'அதற்பின்.....என்று சொல்லிப் புறப்பட்டபின், இருகரையும் பொளிய வருகின்ற யமுநாநதிவெள்ளம் இவனது புண்யப்ராவத்தால் இரண்டருகும் நீங்கி வழி கொடுப்ப, ஹர்ஷவிஸ்மயங்களோடுகூடப் போக, நந்தகோபனென்பானொரு கோபாலன் ஒருஸத்ரீப்ரஜையைஎடுத் துக்கொண்டு எதிரே வர, கண்டு, வஸுதெவன், 'இக்காலத்து நீ வரு கின்ற காரணம் என்?' என்று வினவ, அவனும் ப்ரணமபூர்வகமாக, 'தெவனே, என்ஹார்யை புத்ரோத்பத்தியின்பொருட்டு தெவதையை உபாவஸித்து ஒரு பெண் பெற்றனள். இந்த ஸத்ரீப்ரஜையை அந்த தெவ-தைக்குக் கொடுக்கப் போகின்றேன்' என்று நந்தகோபன் சொல்ல, கேட்டு, வஸுதெவனும் தனது கார்யத்தையெல்லாம் அவனுக் கறிவித்து... அடைந்தனன்' [பக். 434,5]

ஈண்டும், 'அவனும்' என்றும், 'நந்தகோபன்' என்றும் எழுவாய் இரண்டுமுறை வந்துளது. மேல், முதலிற் குறித்தவிடத்தில், இரண்டு எழுவாய்கட்குஇடையே உள்வாக்கியங்கள் சில வந்துள்ளனவாகலின், ஒருவாறு இரண்டெழுவாய்களைக் கொள்ளுதல் அமையினும், ஈண்டுக் கோடல் அமையாது.

'ஸ்ரீநாமதத்தன் ஸ்வஸங்கல்பித ஜிநபதிபூஜையினைப் பண்ணி ப்ரோஷ்டிமுதலாகிய வஸுஜநங்களோடுகூட தாநபரீலோபவாஸ ஜிந பதிபூஜாதி ஸ்ராவகயர்மஸஹிதனாகிச் சென்றபின், ஆயுஷ்யாவஸாநத்து ஸல்லேவநாவியியால் ஸரீரபரித்யாகஞ் செய்து ஸ்ரீநாமதத்தன் ஸௌதர்மகல்பத்து தெவனாகி... மநோஹரன் என்னும் புத்ரனுமி ஞன்'. (பக். 520)

முதலிற் குறித்த இரண்டிடங்களில் வந்துள்ள எழுவாய்கள்-இரண்டனுள் ஒன்று சுட்டுப்பெயராயும் ஒன்று இயற்பெயராயும் இருந்தன. ஈற்றிற் குறித்த வாக்கியத்தில் அவ்வாறன்றி, இயற்பெயராகிய ஸ்ரீநாமஹத்தன் என்பதுவே இரண்டுமுறை வந்துளது. இவ்வாறு வருவது அமைவுடையதன்று. இனி, இத்தகைய நெடியவாக்கியங்களிலன்றிச் சிறியவாக்கியங்களிலும் எழுவாய் இருமுறை வந்துளது.

'அங்யகவ்ருஷ்ணிக்கும் ஸுஹெத்ரு என்னுஞ் செவிக்கும் புத்ரர் ஸுமுத்ரவிஜயனும் அக்ஷோப்யனும் ஸ்திமிதஸாகரனும் ஹிமவாதும் விஜயனும் அசலனும் தாரணனும் பூரணனும் அபிநந்தநனும் வஸுதெவனும் என்பார் புத்ரர் பதின்மர்.' (பக். 419)

என்பது காண்க.

எழுவாயேயன்றி உருபேற்றசொற்களும் வேண்டாவாறு இரண்டு முறை வந்துள்ளன.

'ஹமவாநுக்கு ஸைலர்மேந்த்ரபுத்ரிதெவர்களால் நாடோறும் விடுதரப்பட்ட திவ்யவஸ்த்ரமால்யாபரணாதி ஹொமஸாயநங்களே அதனித்து, மயூகாலாதுருபாக வர்த்திப்பாராகிய தெவகுமாரர்களோடுகூட வளர்த்தருளிய ஹமவாநுக்கு ம்ருகூபாப்ரகாரங்களேயின்றியே ஸகலஸாஸ்த்ரங்களும் ஸகலகலைகளும் ஸகலஸாமர்யங்களும் உளவாகி...' (பக்.82,3)

ஈண்டு, முதலிலுள்ள 'ஹமவாதுக்கு' என்பது மிகை. இவ்வாறிருப்பன சில காணலாம்.

இனி, சிலவிடங்களில் வினையெச்சத்திற்கும் அதனேடியையுடைய வினைமுற்றுக்கும் இடையே அச்சொற்கட்கு இயைபில்லாத வாக்கியங்கள் சில அமைந்துள்ளன. உதாரணம்:

'விஸ்வநந்தி தீர்வகாலம் ஸம்ஸாரசக்ரத்திலே பரிஹ்ரமித்து, இஹ, விஜயார்யபர்வதத்து உத்தரஸ்ரேணியில் அளகாபுரத்து விஹ்யாதர ராஜா மயூரக்ரீவன்; தெவி நீலாஞ்ஜநை. இவர்கட்குப் புத்ரன் அஸ்வக்ரீவன் என்பானாகி, ப்ரதிவாஸுதெவ னுயினன்.' (பக். 234)

'மஹாஸுக்ரகல்பஸ்யராகிய தெவர்கள் ஷோடஸஸாகரோபம காலம் திவ்யஸுவம் அநுபவித்தபின், இஹ, ஸுரம்யவிஷய பௌதநபுரத்து பாஹுபலிஸந்தாநத்து வந்த ராஜா ப்ரஜாபதிமஹாராஜன்; தெவிமார் ஜயவதியும் ஸுபாவதியும் என இருவர். விஸ்வபூதியாகிய தெவன் ஜயவதிபக்கல் விஜயன்என்னும் புத்ரனாகி பலதெவ னுயினன்; விஸ்வநந்தியாகிய தெவன் ஸுபாவதிபக்கல் த்ரிவிஷ்டன்என்னும் புத்ரனாகி வாஸுதெவ னுயினன்.' (பக். 234,5)

'அய, ராமதத்தையாகிய ஹாஸ்கரதெவன் அவ்வழி ஷோடஸஸாகரோபமகாலம் அமரஸுவம் அநுபவித்து, பின், ஜம்பூமதீப ஹரத

புராணத்தைப் பூர்த்திசெய்த குணபத்ராசாரியர்சீடரே மண்டலபுருடர் என்று தஞ்சை T. S. குப்புஸ்வாமிசாஸ்திரிகள் [1] எழுதினர்கள். அதனைத் தக்க நியாயங் காட்டி, ஸ்ரீமத். மு. ராகவையங்காரவர்கள் மறுத்து எழுதியிருக்கின்றார்கள். அவர்கள் கொண்டுள்ளவாறு புராணஞ் செய்தவராகிய மண்டலபுருடர் [2] வீரை என்னும் ஊரினர். இது,

'குணபத்ரன் றந்த நோன்மை
தருநெறி நோற்கும் வீரை தழைத்தமண் டலவன் றனே.' (2. 106)

'மருக்கிளர் பொழில்சூழ் வீரை மன்னன் மண் டலவன் றனே.' (12. 153)

என்பவற்றுள் அறியலாகும் இவர் ஜினவசனத்தை மேற்கொண் டொழுகியவர்; குணபத்ரர்என்னும் ஆசாரியருக்குச் சீடர். இவை,

'பரந்தசீர்க் குணபத் ரன்றாள் பணிந்தமண் டலவன் றனே.' (பாயி. 8)

'குருநறுங் குன்றை வேந்தன் குணபத்ரன் றந்த நோன்மை
தருநெறி நிற்கும் வீரை தழைத்தமண் டலவன் றனே.' (2. 106)

'திருக்கிளர் குணபத் ரன்றாள் சென்னியிற் சூடிக் கொண்டோன்
மருக்கிளர் பொழில்சூழ் வீரை மன்னன் மண்டலவன்.' (12. 153)

என்னு மடிகளான் நன்கறியலாகும். குணபத்ரர் நறுங்குன்றையில் வாழ்ந்தவர் என்பதும், இலக்கணம் சோதிடம் நீதிநூல் சமயநூல் முதலியவற்றை நன்கு கற்றறிந்தவர் என்பதும், தமிழ்மொழியைப் பெரிது வளர்த்துச் சிறப்புற்றவர் என்பதும்,

'சொல்லொடு பொருளு ணர்ந்தோன் சோதிட நீதி வல்லோன்
நல்லறி வாள னெங்க ணறுங்குன்றை ஞான மூர்த்தி
பல்லுயிர்க் கொருதா யாகும் பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லவன் வல்லார்க் கெல்லாம் வரையறத் தரையில் வந்து.' (பாயி. 4)

'பருதியொன் றுதயஞ் செய்து பங்கய மனேக கோடி
முருகெழு மலர்வித் தென்ன முகமுட னகம லர்த்தி
மருவுமுத் தமிழை முன்னுள் வளர்த்தபாண் டியனே போலக்
கருதிய வெல்லாந் தந்து கவிமணி மாலை சூடி.' (பாயி. 5)

'செகமெனும் பளிங்குமாடத் திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப் பொலிவுறு பேரத் தாணி
மகிழ்குண பத்ர னெங்கள் வழித்தெய்வம் போல்வான்' (பாயி. 6)

1. சூத்ரசூடாமணி முன்னுரை.
2. இதுவே பெருமண்டூர் என்ப.

இவரும் 'பருகுவ னன்ன வார்வத்த' ராகிச் சிறிது காலத்தில் இலக்கிய-விலக்கணங்களைக் கற்று, பின்னர், சமயநூல்களையுங் கற்றுத் தேர்ந்தார்.

[1] ஒருநாள், ஆசிரியர் வைத்திருந்த மஹாபுராணச்சுவடியைக் கண்ட இவர் அதனை யவிழ்த்துப் படித்தார். அச் சுவடியில் சிலவேடுகளில் ஒவ்வோரிடத்தில் பட்டுநூல் சுற்றப்பட்டிருந்ததைக் கண்டு, அதன் காரணத்தை யோராமல், அவ் வேடுகளைப் படிக்குப்போது, சுற்றப்பட்டிருந்த நூலை அவிழ்த்துக்கொண்டிருந்தார். அவ் வமயத்தில் அங்குச் சென்ற ஆசிரியர், மாணாக்கர்செயலை நோக்கி, 'அந்தோ! கெடுத்தாய். புராணத்தில் எனக்கு ஐயப்பாடுகளாயிருந்த விடங்களில் அடையாளத்துக்காக நூல் சுற்றியிருந்தேன்; பெரும்புலவர் எவரேனும் வரின் அவர்பால் கேட்டுத் தெளிய எண்ணினேன். இனி, அவ்விடங்களை யறிதல் அரிதாகுமே' என்று வருந்தினர். மாணாக்கர், 'யான் அவ் வேடுகளைப் படித்துவந்தேன்; எல்லாச்சுலோகங்களுக்கும் பொருள் விளங்கிற்று; ஐயந் தோன்றவில்லை' என்று வணக்கத்தோடு தெரிவித்தார். அதனைக் கேட்ட ஆசிரியர், நூல் அவிழ்க்கப்படாதிருந்த ஏடுகளில் தமக்கு ஐயப்பாடாயிருந்த சுலோகங்களின் பொருளை வினவ, இவர் அதனை விளக்கமாகக் கூறினர். ஆசிரியர் பெருவியப்புற்றுப் பாராட்டி, 'இப் புராணத்தைத் தமிழில் எழுதி உபகரிப்பாயாக' என்று சொல்ல, அவ்வாறே மஹாபுராணத்தை இயற்றினர் என்பது.

பெருமண்டூர்முதலிய ஊர்களில்வாழ்பவர் சமயநூல்களைக் கற்பதன் பொருட்டு ஸ்ரவணபெள்குளத்துக்குச் செல்லும் வழக்கம் சிலகாலத்திற்கு முன்வரை கடைபெற்று வந்தது என்று கூறுகின்றனர். அவ்வாறே நம் புராணவாசிரியரும் சமயவறிவு பெறுதற்பொருட்டு ஸ்ரவணபெள்குளஞ் சென்றிருக்கலாம். இவ்வரலாற்றை மேற்கொள்ளின், நம் ஸ்ரீ புராண வாசிரியர் பெருமண்டூரினர் என்று கொள்ள லாகும். ஆயினும் அவர்பெயர் அறியப்படுமாறில்லை.

